# உதயன்

சுடர் : 36 கதிர் : 151 | செவ்வாய்க்கிழமை | சித்திரை 14 ஆம் நாள் 27 ஏப்ரல் 2021 | வள்ளுவர் ஆண்டு 2051 | பக்கங்கள்: 20 விலை : ரூ.30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111


# வடக்கில் பரவுகின்றதா திரிபடைந்த வைரஸ்?

**சந்தேகத்துக்கிடமான மாதிரிகள் கொழும்புக்கு அனுப்பி வைப்பு**

யாழ்ப்பாணம், ஏப்ரல் 27

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை மற்றும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ ஆய்வுகூடத்தில் மேற்கொள்ளப்படும் பரிசோதனைகளின்போது கண்டறியப்படும் சந்தேகத்துக்கிடமான மாதிரிகள் மேலதிக ஆய்வுக்காக கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளன என்று அறியமுடிகின்றது. 19 >



## அபாய கட்டத்தை தாண்டவில்லை

*மாவட்டச் செயலர் எச்சரிக்கை*

யாழ்ப்பாணம், ஏப்.27

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்று இடர் நிலைமை பெரியளவில் தோன்றாவிட்டாலும், இன்னமும் அபாய கட்டத்தைத் தாண்டவில்லை. தற்போதுள்ள நடைமுறைகளில் மாற்றங்கள் ஏற்படலாம். 19 >

## சிகிச்சைக்கு சென்ற சிலருக்குத் தொற்று!

*யாழ்ப்பாணத்தில் நேற்று 13 பேர் அடையாளம்*

யாழ்ப்பாணம், ஏப்.27

யாழ்ப்பாணத்தில் நேற்று 13 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அவர்களில் நால்வர் சாவகச்சேரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றவர்கள் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் 19 >

## இலங்கைக்கான பயணத்தை தவிர்க்குமாறு அறிவுறுத்தல்

கொழும்பு, ஏப். 27

கொரோனாத் தொற்று வீரியம் பெற்றுள்ள நிலையில் வெளிநாடுகள் சில இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ள வேண்டாம் என்று தமது நாட்டு பிரஜைகளை அறிவுறுத்தியுள்ளன. 19 >

## 8 கிராம அலுவலர் பிரிவுகள் முடக்கம்

கொழும்பு, ஏப்.27

கம்பஹா, குருநாகல் மற்றும் திருகோணமலை மாவட்டங்களைச் சேர்ந்த சில கிராம அலுவலர் பிரிவுகள் நேற்றிரவு 8 மணி முதல் தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. 19 >

## 997 பேருக்கு தொற்று: 3 பேர் சாவு

கொழும்பு, ஏப்.27

இலங்கையில் மேலும் 997 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது. இலங்கையில் ஒரு லட்சத்து 2 ஆயிரத்து 376 பேருக்கு இதுவரையில் கொரோ 19 >

## டிப்பர் - இராணுவ வாகனம் உரும்பிராயில் கோர விபத்து

*13 இராணுவத்தினர் காயம்*



யாழ்ப்பாணம், ஏப்.27

யாழ்ப்பாணம் - பலாலி வீதி, உரும்பிராய் சந்தியில் நேற்று அதிகாலை 5.30 மணியளவில் இடம்பெற்ற கோர விபத்தில் 13 இராணுவத்தினர் காயமடைந்துள்ளனர். 19 >



முச்சந்தி முரளி

**"ஓமோம், முழு இடமும் பரவின பிறகு அபாயக் கட்டமாவது வட்டமாவது"**

## மேல், வடமேல் மாகாண பாடசாலைகளும் பூட்டு!

கொழும்பு, ஏப்.27

மேல் மற்றும் வடமேல் மாகாணங்களிலுள்ள அனைத்துப் பாடசாலைகள் மற்றும் முன்பள்ளிகளை நேற்றுத் தொடக்கம் மூடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 30ஆம் திகதி வரை அங்கு பாடசாலைகள் மூடப்படுகின்றன 19 >

## தமிழர்கள் ஒருபோதும் சோர்ந்துவிடக் கூடாது!

ஜெகான் பெரேரா தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.27

சமாதான சூழலுக்குப் பலவிதமான சவால்கள் இருந்து கொண்டிருக்கும். ஆனால் நாம் நம்பிக்கையை இழக்கக்கூடாது. தொடர்ச்சியாக அதற்கான முயற்சியை மேற் 19 >

## அரச ஊழியர்களுக்கு பகுதியளவில் பணி!

கொழும்பு, ஏப். 27

கொரோனாத் தொற்று அதிகரித்துச் செல்வதால் அரசு வெளியிட்டுள்ள புதிய சுற்றறிக்கைக்கு அமைவாக பகுதியளவில் அரச ஊழியர்களைப் பணிக்கு அமர்த்துவதற்கு 19 >

## இந்தியாவின் வைரஸ் இலங்கையில் இல்லை

*ஆதாரமில்லை என்கிறார் மருத்துவர்*

கொழும்பு, ஏப். 27

இந்தியாவில் தற்போது வேகமாகப் பரவும் கொரோனா வைரஸ், இலங்கையில் பரவியுள்ளது என்பதற்கு உறுதியான ஆதாரங்கள் எதுவும் இல்லை 19 >

## சமையல் எரிவாயு விலை தற்போது அதிகரிக்காது!

*இராஜாங்க அமைச்சர் லசந்த தெரிவிப்பு*

கொழும்பு, ஏப்.27

சமையல் எரிவாயுவின் விலையை அதிகரிப்பதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாது என்று நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன தெரிவித்தார். 12.5 கிலோகிராம் 19 >

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொள்ளையடித்தவர்கள் பிணையில்; குற்றம் புரியாத தமிழர்கள் சிறையில்

## இதுவா இலங்கை அரசின் தர்மம்? கேள்வியெழுப்புகின்றார் அருட்தந்தை சக்திவேல்

வவுனியா, ஏப். 27

**நாட்டின் சொத்துக்களை கொள்ளையடித்தவர்கள் ஓரிரு மாதங்களில் பிணையில் வெளியே செல்கின்றார்கள். ஆனால் குற்றமே புரியாத தமிழ் அரசியல் கைதிகள் பத்து வருடங்களுக்கும் மேலாக சிறைப்பிடிக்கப்பட்டிருக்கின்றார்கள். இதுதான் இலங்கை அரசின் தர்மமா?**

இவ்வாறு கேள்வியெழுப்பியுள்ளார் சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சக்திவேல்.

அரசியல் கைதிகளின் தற்போதைய நிலவரம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

தற்போது கொரோனாவை காரணம் காட்டி அரசியல் கைதிகளை பொது மருத்துவமனைக்கு கிளினிக் கொண்டுசெல்வதில்லை. தமிழ் அரசியல்வாதிகள் சந்தர்ப்பத்துக்கேற்ப இவர்களின் பிரச்சினைகளை எடுக்கிறார்களே தவிர, குறைந்தபட்சம் இவ்வாறான காலகட்டத்திலாவது இவர்களைச் சென்று பார்ப்பதற்கு எவ்வித முயற்சியும் இல்லாமல் இருக்கிறார்கள்.

கொரோனாக் காலத்தில் ஏனைய கைதிகளுக்கு பிணை கொடுத்து அனுப்பியிருக்கிறார்கள். இவர்களுக்கெதிராக நீதிமன்றில் குற்றங்கள் இருக்கலாம். ஆனால், அரசியல் கைதிகள் நிர்வாகத்துக்கு எதிராக எவ்வித குற்றமும் செய்யாதவர்கள். ஆகவே இவர்களுக்கும் கொரோனா காலத்தில் பிணை கொடுத்து அனுப்பியிருக்கலாம்.

*சட்டத்தில் தவறா ஆள்களில் தவறா?*

ரவி கருணாநாயக்க போன்றவர்கள் முக்கிய குற்றவாளிகள். இவர்கள் மத்திய வங்கியிலேயே கொள்ளையடித்தவர்கள். அதாவது ஒரு நாட்டின் சொத்துக்களை கொள்ளையடித்த இவர்களே பயங்கரவாத குற்றத்துக்குள் வரவில்லை. இவர்களுக்கு பிணை கொடுத்திருக்கிறார்கள்.

ஆனால் தமிழ் அரசியல் கைதிகளை இவ்வளவு காலமும் சிறை வைத்திருந்தும் அவர்களுக்கு பிணை கொடுக்க முடியாவிட்டால் யாரில் பிழை?, சட்டத்தில் பிழையா? அல்லது சட்டத்தை வைத்து பயன்படுத்துபவர்களில் பிழையா? இந்த இனவாதம் தொடர்பாக தமிழ் அரசியல்வாதிகள் என்ன கூறப் போகின்றார்கள். அரசியல்வாதிகள் ஒவ்வொருவரும் தங்களுடைய தேர்தல் அரசியலுக்குள் நிற்கின்றார்களே தவிர அரசியல் கைதிகள் பற்றி எவரும் சிந்திக்கவில்லை. அரசியல்வாதிகள் இவர்களை நேரில் சென்று பார்வையிட்டால் மட்டுமே தமிழ் அரசியல் கைதிகளின் தேவைகள், பிரச்சினைகளைக் கேட்டு அறிந்துகொள்ள முடியும். அவர்களுக்கான தேவைகளையும் நிவர்த்திசெய்ய முடியும். - என்றார். (த110)

# தவறான முடிவெடுக்க முயற்சித்த பெண் மீட்பு

## நாவற்குழி பாலத்தடியில் சம்பவம்



கொடிகாமம், ஏப். 27

தவறான முடிவெடுக்க முயற்சித்த பெண்ணொருவரை வீதியில் பயணித்த பொதுமக்கள் மீட்ட சம்பவம், நாவற்குழி பாலத்தில் நேற்று மதியம் இடம்பெற்றது.

குறித்த பெண் நாவற்குழி பாலத்திலிருந்து கீழே பாய்ந்து தவறான முடிவு எடுக்க முற்பட்ட நிலையிலேயே அந்தப் பகுதியால் சென்ற பொதுமக்கள் அந்தப் பெண்ணை மீட்டனர்.

அந்தப் பெண் யாழ்ப்பாண நகர்ப்பகுதியைச் சேர்ந்தவர் என்றும் காதல் விவகாரத்தால் தவறான முடிவு எடுக்க முற்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (த159)

# கிளிநொச்சி மருத்துவமனைக்கு 100 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

கிளிநொச்சி, ஏப். 27

கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையின் இரண்டாம் கட்ட அபிவிருத்தியின் ஒரு கட்டமாக 100 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டுக்கு மத்திய சுகாதார அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. இதனடிப்படையில் இந்த வருடம் 50 மில்லியன் ரூபாவும், அடுத்த வருடம் 50 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்படும் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. மருத்துவமனையில் இரண்டாம் கட்ட அபிவிருத்தியின் ஒரு பகுதியாக ஆய்வுகூட வசதிகளை மேம்படுத்தும் நோக்கில் நிரந்தர ஆய்வுகூட கட்டடம் அமைத்தல், ஆய்வுகூட உபகரணங்கள் கொள்வனவு செய்தல் போன்றவற்றுக்கு குறித்த நிதி பயன்படுத்தப்படவுள்ளது என்று மாவட்ட மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்துள்ளது. (த-214)

# தொற்று நீக்கப்படவுள்ளது கனகரத்தினம் ம.ம.வி.

யாழ்ப்பாணம், ஏப். 27

யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் முடக்கப்பட்ட நிலையில், இன்று காலை கிருமித் தொற்று நீக்கி விசிறப்பட்ட பின்னர், கற்றல் செயற்பாடுகள் நடைபெற அனுமதிக்கப்படும் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

பாடசாலைகள் மற்றும் பொது மைதானங்களில் விளையாட்டு நிகழ்வுகளை நடத்த சுகாதார அமைச்சு தடை விதித்துள்ளது.

அதனால், குறித்த பாடசாலை மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெறவிருந்த சனசமூக நிலையம் ஒன்றின் விளையாட்டு நிகழ்வை இடைநிறுத்துமாறும், அதற்காக மைதானத்தை வழங்க வேண்டாம் எனவும் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரியால் அதிபருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

எனினும், மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் அனுமதியளித்துள்ளார் எனத் தெரிவித்து அதிபர், நிகழ்வை நடத்த அனுமதியளித்திருந்தார்.

சுகாதாரத் திணைக்களத்தின் ஆலோசனை பெறப்படாமல் விளையாட்டு நிகழ்வுக்கு அனுமதியளிக்க வேண்டாம் என தான் அறிவுறுத்தியிருந்தேன் என்று மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், சுகாதார மருத்துவ அதிகாரிக்கு தகவலளித்திருந்தார்.

இந்த நிலையில் யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரியின் அறிவுறுத்தலில் பாடசாலை தனிமைப்படுத்தல் அடிப்படையில் முடக்கப்பட்டிருந்தது.

எனினும், விளையாட்டு நிகழ்வில் பங்கேற்றவர்கள் தொடர்பான விவரங்களை பாடசாலை அதிபர் யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரியிடம் நேற்றுக் கையளித்திருந்தார். (த20)

# உரிமைக்காகப் போராட முடியும் என்பதை தந்தையின் நினைவுகள் வலியுறுத்துகின்றன

## சுட்டிக்காட்டுகின்றது 'பொ - பொ' மக்கள் பேரெழுச்சி இயக்கம்



யாழ்ப்பாணம், ஏப். 27

2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் அரசியலில் அநாதைகளாக, உரிமை போராட்டத்தின் வழித்தடத்தைத் தேடி நிற்கும் தமிழினம், விட்டுக்கொடுப்புகளின்றி சலுகைகளை மறுத்து உரிமைக்காக மீண்டும் அகிம்சை வழியிலும் போராட முடியும் என்பதை தந்தை செல்வாவின் நினைவுகள் வலியுறுத்தி நிற்கின்றன.

இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளது, பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை (பொ - பொ) மக்கள் பேரெழுச்சி இயக்கம்.

ஈழத் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தின் தந்தையாக விளங்கும் எஸ்..ஜே.வி.செல்வநாயகத்தின் 44ஆவது நினைவு தினம் நேற்று பல இடங்களிலும் கடைப்பிடிக்கப்பட்டது. இந்த நிலையில் குறித்த பேரெழுச்சி இயக்கம் அனுப்பிய செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

வட்டுக்கோட்டை தீர்மானத்துக்கு தமிழினம் வழங்கிய ஏகோபித்த ஆதரவானது ஒட்டுமொத்த இனத்தினதும் அரசியல் அபிலாசையை முழு உலகுக்கும் வெளிப்படுத்தி நின்றது. குறித்த தீர்மானமே அதன் பின் நடைபெற்ற அனைத்து போராட்ட வடிவங்களுக்கும் அடிப்படையாக அமைந்தது.

*மறைக்க கங்கணம் கட்டும் பேரினவாதம்*

தமிழ்த் தேசியத்துக்காகக் குரல் கொடுக்கும் ஒவ்வொரு தமிழ் மகனையும் மகளையும் பயங்கரவாதியாக சித்தரிக்க முயலும் சிங்கள பேரினவாத அரசானது தமிழினத்தின் அகிம்சைவழிப் போராட்ட வரலாற்றை ஏனோ இலகுவாக மறப்பதுடன் மறைத்தும் வருகின்றது.

நாட்டை இழந்து, இன அழிப்புக்கு உள்ளாகி, தமது பூர்வீக நிலங்களை சிங்கள பேரினவாதத்திடமிருந்து காப்பாற்ற போராடிக்கொண்டிருக்கும் தமிழ் இனத்துக்கு, தந்தை செல்வா காட்டிய அகிம்சைவழிப் போராட்டமானது தமிழ் தேசியப் பாதையைக் காட்டி நிற்கின்றது.

உரிமைக்காக மட்டுமன்றி நீதிக்காகவும் போராடிக்கொண்டிருக்கும் நாம், எமது வரலாற்று பாடங்களிலிருந்து, சிங்கள பேரினவாதத்திடமிருந்து எதையும் பெற்றுக்கொள்ள முடியாது என்பதை தெளிவாகவே அறிந்துள்ளோம். ஆயினும், சர்வதேசத்தில் எஞ்சியிருக்கும் மனிதவுரிமை மற்றும் நீதியின் மீதான பற்றுறுதியின் பால் நம்பிக்கை வைத்தே தொடர்ந்தும் போராடி வருகின்றோம்.

தமிழ்த் தேசியத்தின் மீதே தந்தை செல்வாவின் அரசியல் வாழ்வு கட்டமைக்கப்பட்டிருந்தது. ஆயினும், சில தரப்புகள் தந்தை செல்வாவின் பெயரால் தமிழ்த் தேசிய நீக்க அரசியலை முன்னெடுக்க முயல்கின்றன. இவர்கள் தமிழினத்தை தவறாக வழிநடத்த முயற்சிக்கின்றனர். - என்றுள்ளது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசின் அதிருப்தியாளர்களை இணையுமாறு அழைப்பு!!!

## தமது ஆட்சி விரைவில் மலரும் என்கிறார் சஜித்



**கொழும்பு, ஏப்ரல் 27**

**மஹிந்த ராஜபக்ச திறந்துள்ள கதவைப் பயன்படுத்தி, அரசின் அதிருப்தியாளர்கள் ஆளும் கூட்டணியிலிருந்து வெளியேறி எம்முடன் இணைந்து கொள்ளுங்கள். விரைவில் மலரும் எமது ஜனநாயக ஆட்சியில் பங்காளிகளாகுங்கள்.**

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

'அரசின் திட்டங்களை அரசுக்குள் இருந்து விமர்சிப்பவர்கள் அரசிலிருந்து தாராளமாக வெளியேறலாம். கதவு திறந்துதான் உள்ளது' என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ச ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுடனான சந்திப்பின்போது காரசாரமாகத் தெரிவித்துள்ளார்.

மஹிந்தவின் இந்தக் கருத்துத் தொடர்பில் கேட்டபோதே சஜித் பிரேமதாச மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசின் உள்வீட்டுப் பிரச்சினை இன்று பூகம்பமாகி வெளிச்சத்துக்கு வந்துள்ளது. பிரதமர் மஹிந்தவின் இந்தக் கருத்துக்களிலிருந்து அரசின் குழப்பங்கள் சந்திக்கு வந்துள்ளன.

தனக்கு கீழ் இருக்கின்ற அமைச்சர்களையும், பங்காளிக் கட்சித் தலைவர்களையும் கட்டுப்படுத்த முடியாத பிரதமர் இந்த நாட்டை எப்படி முன்னேற்றப் பாதைக்கு கொண்டுசெல்லப் போகின்றார்?

அரசு ஆட்டம் காணத் தொடங்கியுள்ள இந்தச் சூழலில்தான் மஹிந்தவின் சீற்றமான கருத்துக்கள் வெளியாகியுள்ளன.

அரச தலைமை ஒழுங்கான பாதையில் பயணித்திருந்தால், அதற்குள் முரண்பாடுகள் ஏற்பட்டிருக்க சந்தர்ப்பம் இருந்திருக்காது.

மஹிந்த திறந்துள்ள கதவைப் பயன்படுத்தி வெளியேற விரும்புபவர்கள் எம்முடன் கைகோர்க்கலாம். நாட்டு மக்கள் விரும்புகின்ற சர்வதேசம் திரும்பிப் பார்க்கின்ற நாட்டை பொருளாதார ரீதியில் முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்லக்கூடிய பலம்மிக்க ஜனநாயக ஆட்சியை நிறுவ நாம் தயாராக இருக்கின்றோம். அது விரைவில் மலரும் என்ற நம்பிக்கை எமக்கிருக்கின்றது. எனவே அரசிலுள்ள அதிருப்தியாளர்களுக்கும் எதிர்க்கட்சியிலுள்ள உறுப்பினர்களுக்கும் பலம்மிக்க ஆட்சியை நிறுவ நான் அழைப்பு விடுக்கின்றேன்- என்றார். (ஒ,5,22)

# தமிழர்களுக்கான அநீதியால் துண்டாடப்படுகின்றது நாடு

## இராதாகிருஸ்ணன் தெரிவிப்பு

ஹற்றன், ஏப். 27

இலங்கைத் தமிழர்களுக்கு இந்த நாட்டின் பெரும்பான்மை சமூகம் செய்த அநீதியின் விளைவாக, இன்று இந்த நாடு துண்டாடப்பட்டு பகுதி பகுதியாக விற்பனை செய்யப்படுகின்றது என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார். மலையக மக்கள் முன்னணியின் மறுசீரமைப்புக் கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்று இலங்கை என்ற அழகிய தீவு ஒவ்வொரு நாட்டுக்கும் துண்டாடப்பட்டு விற்பனை செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றது. அதற்கு காரணம் அன்று பெரும்பான்மை சமூகத்தால் மலையக மக்களுக்கும், இலங்கை தமிழர்களுக்கும் இழைக்கப்பட்ட அநீதியாகும்.

அதேவேளை மலையக பெருந்தோட்டப் பகுதிகளில் காணப்படும் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் செயற்றிட்டங்களைத் துரிதப்படுத்த வேண்டும். பல பாடசாலைகளில் நிலவும் காணி, கட்டடம், தளபாடங்கள், பௌதீக வளங்கள் மற்றும் ஆளணி பற்றாக்குறைகள் ஆகியவற்றைத் தீர்ப்பதற்கு முதற்கட்டமாக நடவடிக்கைகளை எடுத்தாக வேண்டும். மலையக மாவட்டங்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் தமிழ் பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உரிய நடவடிக்கைகளை, வினைத்திறன்மிக்க செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டியது அவசியம் - என்றார். (ம-4)

# ஜயந்தி தினம்

யாழ்ப்பாணம், ஏப்.27

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில் ஸ்ரீலஸ்ரீ மௌனகுரு கடவுள் சுவாமிகளின் 116ஆவது ஜயந்தி தினம் நாளை புதன்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது. அன்றைய தினம் விசேட பூசைகளும் சொற்பொழிவும் இடம்பெறவுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# வேலைவாய்ப்பு பணியகம் மூடல்

கொழும்பு, ஏப். 27

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் தலைமை அலுவலகம் 2 நாள்களுக்கு தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. பணியாளருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டதையடுத்தே பத்தரமுல்லையில் அமைந்துள்ள அதன் தலைமை அலுவலகம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. இன்றும் நாளையும் அதன் சேவைகள் நடைபெறாது. (ஒ.இ)

# கொழும்பு துறைமுகநகரம் சீனாவுக்கு மட்டுமானதல்ல


## இராஜாங்க அமைச்சர் மீண்டும் விளக்கம்

கொழும்பு, ஏப். 27

கொழும்பு துறைமுக நகரம், சீனாவின் முதலீடுகளுக்காக மட்டும் வழங்கப்பட மாட்டாது. இங்கு ஏனைய நாடுகளும் வருகைதந்து முதலீடுகளை மேற்கொள்ள முடியும். இவ்வாறு நிதி, மூலதனச் சந்தை மற்றும் அரச தொழில்முயற்சி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொழும்பு துறைமுக நகரின் நிலப்பரப்பு பறிபோகாது. அது இலங்கையிடமே காணப்படும். இதேவேளை, நாட்டின் தற்போதைய வளர்ச்சி வீதம் 2 வீதமாகக் காணப்படுகின்றது. இந்த வளர்ச்சி வீதத்துடன் நாடு தொடர்ச்சியாகப் பயணிக்க முடியாது. ஆகவே துறைமுக நகரின் ஊடாக 15 பில்லியன் டொலர்கள் வருமானத்தைப் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கின்றோம். அதற்காக அனைத்து நாடுகளும் முதலீடுகளைச் செய்வதற்கு கவர்ச்சியான வரிச் சலுகைகளை வழங்கவுள்ளோம். அதற்காகவே ஆணைக்குழு சட்டவரைவைத் தயாரித்துள்ளோம் - என்றார். (ம-4)



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் சர்வதேச புவி தின நிகழ்வு கடந்த 22ஆம் திகதி நடைபெற்றது. நிகழ்வில் புவி தினம் தொடர்பாக 'எங்கள் பூமியை மீட்டெடுப்போம்' தொனிப்பொருளில் சுற்றாடல் கழகத்தினர் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர். (ச)

# சு.க. தனி வழி மைத்திரி முடிவு

கொழும்பு, ஏப். 27

எந்தவொரு தேர்தல்களிலும் எந்தவொரு கட்சியுடனும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி இனி கூட்டு வைத்துக்கொள்ளாது. அந்தக் கட்சி தனித்து கைச் சின்னத்திலேயே களமிறங்கும். இவ்வாறு அந்தக் கட்சியின் பொதுச் செயலர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்த முடிவை எடுத்துள்ளார் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஒ.இ)

# இடமாற்றம்

அளவெட்டி, ஏப்.27

மல்லாகம் கிராம, அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் செயற்பட்டு வரும் வலி.வடக்கு பிரதேச மத்தியஸ்தர் சபை, எதிர்வரும் மே மாதம் 2ஆம் திகதி தொடக்கம் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் செயற்படும் என மத்தியஸ்த சபையின் தவிசாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-36)

# 2,550,000 பேருக்கு ரூ.5,000 கொடுப்பனவு

கொழும்பு, ஏப். 27

நாட்டில் இதுவரை 25 லட்சத்து 50 ஆயிரம் பேருக்கு, ஐயாயிரம் ரூபா சமூகப் பாதுகாப்புக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது என்று சமுர்த்திப் பணிப்பாளர் நாயகம் பந்துல திலகசிறி தெரிவித்துள்ளார்.

அதேவேளை இந்தக் கொடுப்பனைப் பெற்றுக்கொள்வதற்குத் தகுதிபெற்றும், இதுவரை அதனைப் பெற்றுக்கொள்ளாதவர்களுக்கு எதிர்வரும் தினங்களில் கொடுப்பனவை வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. (ம-4)

# வரவேற்பு பகுதி பூட்டு

கொழும்பு, ஏப். 27

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் பயணிகள் வரவேற்பு பகுதி மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளது.

விமான நிலையத்தின் வருகை மற்றும் பிரவேசிக்கும் முனையங்களின் பயணிகள் வரவேற்பு பகுதியே இவ்வாறு மூடப்பட்டுள்ளது. (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிரணியினர் மீதான மிரட்டல்களின் பின்னணிகளை புரிந்துகொள்ளுங்கள்

## மனோ எம்.பி. தெரிவிப்பு



**கொழும்பு, ஏப். 27**

**நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் கைதுசெய்யப்பட்டுள்ளார். ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களான ஹரின் பெர்னாண்டோ மற்றும் மனுஷ நாணயக்கார ஆகியோரும் கைதாகும் சூழல் ஏற்படுத்தப்படுகின்றது. இந்த அரசு இதன் ஊடாக எதிர்க்கட்சிகளுக்கு அச்சுறுத்தல் விடுத்து நாட்டின் உண்மையான பிரச்சினைகளை மறைக்க முற்படுகின்றது.**

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ரிஷாத் மீதான பொதுவான சமூக வலைத்தளக் குற்றச்சாட்டுகளை நானறிவேன். அவரது கட்சியினர் 20ஆம் திருத்தம் தொடர்பில் அரசுக்கு ஆதரவளித்த 'அரசியல் சூழல்' தொடர்பிலும் எனக்கு மனவேதனை இருக்கின்றது. ஆனால், இவற்றைக் காரணமாகக் கூறி, அவர் கைது செய்யப்பட்டதை நியாயப்படுத்தவோ, அரசின் அராஜக போக்குக்கு ஒரு சாட்டு தேடிக் கொடுக்கவோ கூடாது.

2007ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் தமிழ் மக்களுக்காக நான் குரல் கொடுத்தபோது எனக்கு பல்வேறு மிரட்டல்கள், அச்சுறுத்தல்கள் வந்தன. எந்தவொரு தமிழ் அல்லது முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களும் எனக்காக வாய் திறக்கவில்லை. அரசுடன் சேர்ந்து பலர் அமைதிகாத்தார்கள். அதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். ஆனால், அந்த தமிழ், முஸ்லிம் அரசியல்வாதிகளின் பெயர் பட்டியலை கையில் வைத்துக்கொண்டு இன்று எனது நிலைபாடுகளை நான் தீர்மானிக்க முடியாது. அந்தளவு 'சிறுமனதாளன்' அல்ல, நான். ஒரு பாதாள உலக கேடியை இழுத்து செல்வதைப் போல் ரிஷhத்தைக் கொண்டுசென்றதன் மூலம் இந்த அரசு எமக்கு சொல்கின்ற செய்தி என்ன?

'தன்மீது குற்றம் சாட்ட சாட்சியங்கள் இருந்தால், தன்னை விசாரியுங்கள்' என்று அவரே பலமுறை கூறியுள்ளார். ஆனால், எதிர்க்கட்சியில் இருக்கும் போது, தினசரி வரிசையாக வந்து, அவர் மீது குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்துவிட்டு, பின் ஊடகங்களில் வசைபாடிவிட்டு, சாட்சியங்கள் இருக்கின்றன எனக் கூறி விட்டு, ஆட்சிக்கு வந்த ஒரே மாதத்தில் சூத்திரதாரிகளை தூக்கில் போடுவோம் எனவும் கூறிவிட்டு, ஆளும்கட்சியாக மாறிய பின், சுமார் இரண்டு வருடங்கள் சும்மா இருந்துவிட்டு, இப்போது நௌபர் மௌலவி என்பவரே சூத்திரதாரி எனவும் அறிவித்துவிட்டு, ரிஷாத்தை இந்த அரசு கைதுசெய்துள்ளது.

கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை, நௌபர் மௌலவியை 'சூத்திரதாரியாக' ஒப்புக்கொள்ளாததால், அவரை சமாளிக்க ரிஷாத்தை இந்த அரசு கைதுசெய்கிறது என்ற பலத்த சந்தேகம் எமக்கு ஏற்பட்டுள்ளது.

இதேபோல்தான், நண்பர்கள் ஹரின் மற்றும் மனுஷ ஆகியோர் மீதும் கைது மேகங்கள் சூழ்கின்றன. நாளை இது இன்னும் மேலும் பலரையும் சுற்றி வளைக்கும். ஆகவே நாம் இந்தப் பின்னணியை புரிந்துகொள்ள வேண்டும்.

ரிஷாத் கைது பற்றி, எதிர்க்கட்சித் தலைவர் சஜித்துடன், தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவராக நான் பேசினேன். தற்போது ஐக்கிய மக்கள் சக்தியின் விசேட கட்சி தலைவர்கள் கூட்டம் இன்று நடைபெறவுள்ளது. இதில் இவை பற்றி நாம் ஆழமாக ஆராய்வோம் என்று நம்புகிறேன்- என்றுள்ளது. (ஒ.இ)

සමගි ජන බලවේගය
ஐக்கிய மக்கள் சக்தி • Samagi Jana Balawegaya

# ஐக்கிய மக்கள் சக்தியின் கட்சித் தலைவர்கள் கூட்டம்

கொழும்பு, ஏப். 27

ஐக்கிய மக்கள் சக்தியின் விசேட கட்சித் தலைவர்கள் கூட்டமொன்று கொழும்பில் இன்று நடைபெறவுள்ளது. எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் கட்சியின் சிரேஷ்ட சட்டத்தரணிகள் சிலரும் பங்கேற்பார்கள் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

ஐக்கிய மக்கள் சக்தியில் அங்கம் வகிக்கும் பங்காளிக்கட்சியான அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் ரிஷாத் பதியுதீன் ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் கைதுசெய்யப்பட்டுள்ளார். அத்துடன், மேற்படி தாக்குதல் சம்பவம் தொடர்பில் கருத்துகளை வெளியிட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் இரு எம்.பிக்கள் கைது செய்யப்படும் நிலைமை உள்ளது என்று எதிரணி உறுப்பினர்கள் குறிப்பிட்டுள்ளனர். அத்துடன், அரசியல் பழிவாங்கல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கை ஊடாகவும் எதிரணித் தலைவர்களை அரசியல் ரீதியில் வேட்டையாடுவதற்கு அரசு முற்படுகின்றது என்ற குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே நாடாளுமன்றத்துக்குள்ளும், வெளியிலும் இவற்றுக்கு எதிராக மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் சம்பந்தமாக இதன்போது விரிவாக கலந்துரையாடப்படவுள்ளது. (ம-44)

# முஸ்லிம்களின் உணர்வுகளுக்கு மதிப்பளியுங்கள்

## மஹ்ரூப் கோரிக்கை

திருமலை, ஏப். 27

பிரதமர், ஜனாதிபதி மற்றும் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் போன்றவர்கள் முஸ்லிம் சமூகத்தின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து செயற்பட வேண்டும். இவ்வாறு மக்கள் காங்கிரஸின் தேசிய அமைப்பாளரும், முன்னாள் பிரதியமைச்சருமான அப்துல்லா மஹ்ரூப் கோரிக்கை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ரிஷாத் பதியுதீன் நாடாளுமன்ற உறுப்பினராக வழி நடத்தப்படாமல், முறையற்ற விதத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

சபாநாயகரின் அனுமதி பெறப்படாமலும் இந்தக் கைது இடம் பெற்றுள்ளது.

இந்த அடாவடித்தன கைதுக்கு எதிராக, முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இணைந்து சபாநாயகரை உடனடியாக சந்தித்து களத்தில் இறங்க வேண்டும். கடந்த காலத்தில் கட்சி பேதமற்ற முறையில் எவ்வாறு செயற்பட்டோமோ அது போன்று இணைந்து செயற்படவேண்டும்- என்றார். (ம-4)

# சுற்றுலா பயணிகளால் இலங்கைக்கே மதிப்பு

## கூறுகின்றார் உதயங்க

கொழும்பு, ஏப். 27

சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகைதந்தால் மட்டுமே. நாட்டுக்குரிய மதிப்புக் கிடைக்கும். அத்துடன் சுற்றுலாத்துறையும் அபிவிருத்தியடையும் இவ்வாறு ரஷ்யாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தனது பேஸ்புக்கில் பதிவிட்டுள்ளதாவது, கொரோனாத் தொற்றுக் காலப்பகுதியில் சுற்றுலாப் பயணிகளை நாட்டுக்கு அழைப்பது மிகக் கடினம். எனினும் சுற்றுலாப் பயணிகளின் வருகையால் இலங்கையர்களின் பார்வையும் படிப்படியாக மாறும்- என்றுள்ளது. (ம-4)

# எரிவாயு சிலிண்டரின் விலைச்சூத்திரம் என்ன?

## நளின் எம்.பி. சபையில் கேள்வி

கொழும்பு.ஏப்.27

உள்நாட்டு எரிவாயு சிலிண்டரின் எடையைக் கணிசமாகக் குறைப்பது தொடர்பில், ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார நாடாளுமன்றில் கேள்வியெழுப்பினார்.

ஆரம்பத்தில் 12.5 கிலோக்கிராமாக இருந்த எரிவாயு சிலிண்டர், 3 கிலோவால் குறைக்கப்பட்டுள்ளது. அதேவேளை 100 ரூபாவால் விலையும் குறைக்கப்பட் டுள்ளது. இதில் எரிவாயு விலைச் சூத்திரம் என்ன என்பது புரியவில்லை. இதற்கு வர்த்தக அமைச்சர் பதில் கூற வேண்டும் என்று அவர் சபையில் தெரிவித்தார். விலையை நிர்ணயிப்பது நுகர்வோர் விவகார அதிகார சபையின் பொறுப்பு. எரிவாயு அன்றாட தேவை. இந்த மோசடி தொடர்பில் ஆராயப்படும் என்று வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார். (ம-4)

# ரிஷாத் கைது அரசியல் பழிவாங்கலே

## வவு. நகரசபை அ.இ.ம.கவின் உறுப்பினர்கள் அறிக்கை

வவுனியா.ஏப்.27

முன்னாள் அமைச்சரும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவருமான ரிஷாத் பதியுதீன் நள்ளிரவில் கைதுசெய்யப்பட்டமையானது; மிகப்பெரும் கீழ்த்தரமான அரசியல் பழிவாங்கல் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் வவுனியா நகர சபை உறுப்பினர்களான ஏ.ஆர்.எம் லரீப் மற்றும் எம்.எஸ். அப்துல் பாரீ ஆகியோர் தெரிவித்துள்ளனர். புனித நோன்பு காலத்தில் மேற்கொள்ளப்பட்ட இந்தக் கைதானது மனிதாபிமானமுள்ள எவராலும் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று என்றும் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அந்த அறிக்கையில் மேலும் உள்ளதாவது;

சிங்களச் சமூகத்தின் மத்தியில் எழுந்துள்ள எதிர்ப்பலைகளையும் மறைத்து மக்களைத் திசை திருப்ப மேற்கொள்ளப்பட்ட நாடகங்களில் ஒன்றுதான் ரிஷாத் பதியுதீன் மற்றும் அவரது சகோதரரின் கைது. ஈஸ்டர் குண்டுத் தாக்குதலுக்கும் ரிஷாத் பதியுதீனுக்கும் எந்தவொரு தொடர்பும் இல்லையென கடந்த அரசும், இந்த அரசும் விசாரித்து அறிக்கையும் வெளியாக்கியிருந்தது.

இப்போது திடீரென அந்த குண்டு வெடிப்புச் சம்பவத்துடன் ரிஷாத்துக்கும் தொடர்பு உள்ளது எனக் கூறுவது மிகக் கீழ்த் தரமான அரசியல் பழிவாங்கல் என்பது மட்டுமன்றி முஸ்லிம் சமூகத்தை வேரோடுஇந்த நாட்டிலிருந்து துடைத்தெறியும் ஏற்பாடாகவே பார்க்க வேண்டியுள்ளது- என்றுள்ளது. (ப-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# கொடு-பறி-எடு-வதை!

வலிகாமம் வடக்கு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட காங்கேசன்துறைப் பிரதேசத்தில் இராணுவத்தால் இரண்டு காணிகள் 'மீள' ஆக்கிரமிப்புச் செய்யப்பட்டுள்ளன. மைத்திரி - ரணில் அரசின் ஆட்சிக்காலத்தில் மேற்படி காணிகள் இராணுவத்தால் விடுவிக்கப்பட்டு, அவை மக்களிடம் கையளிக்கப்பட்டிருந்தன. இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலும்கூட வெளிவந்திருந்தது. இந்த நிலையில் மேற்படி காணிகள் அடாத்தாக, சத்தமின்றி மீள ஆக்கிரமிப்புச் செய்யப்பட்டுள்ளன. இந்த 'மீள் ஆக்கிரமிப்பு' நடவடிக்கை உண்மையில் மிகவும் பாரதூரமானது. இது பல்வேறுபட்ட அபாய ஒலிகளை தமிழர் பகுதிகளை நோக்கி எழுப்புகின்றது.

கோத்தாபய அரசின் ஆட்சிக்காலத்தில் பல இடங்களில் பல காணிகளை கையகப்படுத்த அறிவித்தல் வெளிவருவதும், பின்னர் மக்களின் போராட்டத்தை அடுத்து அளவீடுகள் நிறுத்தப்படுவதும், அளவீட்டாளர்கள் திரும்பிச் செல்வதும் அண்மைக் காலமாக அரங்கேறும் காட்சிகள்தான். இந்த நிலையில், தற்போது இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த அடாத்து நடவடிக்கை, கடந்த அரசின் ஆட்சிக்காலத்தில் விடுவிக்கப்பட்டு வர்த்தமானி அறிவித்தல் வெளிப்படுத்தப்பட்ட காணிகள்கூட இந்த அரசின் ஆட்சியில் மறுபரிசீலனைக்கு உட்படுத்தப்படும். அவை ஆக்கிரமிப்புச் செய்யப்பட்டாலும் ஆச்சரியத்துக்கு ஒன்றுமில்லை என்ற செய்திகளையே கற்பிதம் செய்கின்றன.

அண்மைக்காலமாக இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களின் போதெல்லாம் இந்தக் காணி அபகரிப்புக்கு எதிராக, தாம்படும் இன்னல்களை பொதுமக்கள் பட்டியலிட்டதை அவதானிக்கக் கூடியதாகவிருந்தது. போர் தந்த வடுக்கள் இன்னும் எம் மக்களின் மனங்களில் இருந்து நீங்கவில்லை. போரால் ஆகக்கூடிய பாதிப்புக்களை எதிர்கொண்ட தமிழர் பகுதிகள், தற்போது அதிலிருந்து மெல்லமெல்ல விடுபட்டு அடுத்த கட்டத்தை நோக்கிப் பயணிக்க எத்தனிக்கையில், இவ்வாறான நடவடிக்கைகள் இந்த நாட்டின் மீதும் இராணுவத்தின் மீதும் மேலும்மேலும் உச்சபட்ச வெறுப்பை தமிழ் மக்கள் உமிழவே காரணமாக அமையும். காயங்களுக்கு மருந்திடும் பணிகளைச் செய்வதை விட்டுவிட்டு விடுத்து, காயங்களை மேலும்மேலும் பெரிதாக்கும் நடவடிக்கைகளையே இந்த அரசு அண்மைக்காலமாக மேற்கொண்டு வருகின்றது. இதுவே அடுத்த சில வருடங்களுக்குத் தொடர்கதையாகவும் இருக்கப் போகின்றது.

'இராணுவமும் பௌத்தமும்' என்பதை எழுதப்படாத கொள்கையாகக்கொண்டு செயற்படும் கோத்தாபய அரசு, சக மக்களினதும் மதங்களினதும் இருப்பையும் மதிக்கக் கற்க வேண்டும். தென்பகுதியில் தனக்கிருக்கும் எதிர்ப்பலையை இல்லாமல் செய்வதற்காக முன்னெடுக்கும் இந்த விசமத்தனமாக நடவடிக்கைகள் ஒரு கட்டத்துக்கு அப்பால் அரசுக்கே பேராபத்தை ஏற்படுத்தும். மஹிந்தவின் ஆட்சிக்காலத்தில் எதையெல்லாம் மக்கள் வெறுத்து மைத்திரியை ஜனாதிபதியாக்கினார்களோ, அதையெல்லாம்தான் கோத்தாபய அரசு செய்து வருகின்றது. ஆக, மஹிந்த விட்ட இடத்தில் இருந்து கோத்தாபய ஆரம்பித்திருக்கின்றார். பயணம் இதே பாதையிலாக இருந்தால் முடிவும் மஹிந்தவுக்கு நிகழ்ந்ததேதான். ஏனெனில் மக்கள் மந்தைகள் அல்லர். அவர்களுக்குப் புரியும். ஆனால் கொஞ்சம் தாமதமாகும்.




# தந்தை செல்வாவின் 44 ஆவது நினைவு தினம்

## யாழில் நேற்று அனுஸ்டிப்பு





**யாழ்ப்பாணம், ஏப்.27**

**இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் ஸ்தாபகர் தந்தை செல்வாவின் 44 ஆவது நினைவு தினம் நேற்று யாழ்ப்பாணத்தில் உள்ள தந்தை செல்வா சதுக்கத்தில் அனுஸ்டிக்கப்பட்டது.**

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், தந்தை செல்வாவின் உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, நினைவுத் தூபிக்கு மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மதத் தலைவர்கள், வடக்கு மாகாண முன்னாள் உறுப்பினர்கள், பிரதேச சபைகளின் தவிசாளர்கள் மற்றும் உறுப்பினர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

தொடர்ந்து யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் உள்ள தந்தை செல்வா அரங்கில் நினைவுப் பேருரையும் இடம்பெற்றது.

(ப-20)

# ஜே.வி.பி.யின் மேதினக் கூட்டங்கள் திட்டமிட்டவாறு இடம்பெற்றேயாகும்

## அதன் மத்தியகுழு உறுப்பினர் யாழில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.27

மக்கள் விடுதலை முன்னணியின் மேதினக் கூட்டம் திட்டமிட்டபடி நாடுமுழுவதும் இடம்பெறும் என மக்கள் விடுதலை முன்னணியின் மத்திய குழு உறுப்பினர் இ.சந்திரசேகரம் தெரிவித்துள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணியின் யாழ் மாவட்ட அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் மேலும் தெரிவிக்கையில்;

இம்முறை மேதினத்தைக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளை நாங்கள் முன்னெடுத்து வருகின்றோம். எனினும் இந்த அரசு எமது மேதின நிகழ்வுகளைத் தடைசெய்வதற்கு பல்வேறு விதத்திலும் முயன்று வருகின்றது. மக்கள் விடுதலை முன்னணியினர் ஆகிய நாங்கள் எந்தத் தடை வந்தாலும் கொழும்பிலும் ஏனைய மாவட்டங்களிலும் மேதினத்தை நினைவுகூருவோம் என உறுதி கொண்டுள்ளோம்.

மே மாதம் என்பது ஒரு விசேட மாதமாகும், முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு மற்றும் மேதின நிகழ்வு இடம்பெறும் மாதமாகும்.

முள்ளிவாய்க்காலில் லட்சக்கணக்கான இறந்த உயிர்களை மக்கள் நினைவுகூரும் நாள். எனினும் இந்த அரசு தற்போது கொரோனா என்ற ஒரு மாயையை உருவாக்கி இந்த இரண்டு தினங்களையும் தடுப்பதற்கு முயற்சிக்கிறது. முள்ளிவாய்க்காலில் இறந்தவர்கள் அவர்கள் எதற்காகப் போராடினார்கள் என்பதல்ல பிரச்சினை. எதற்காகப் போராடினாலும் அவர்கள் எமது நாட்டு மக்கள். அவர்கள் வேறு யாரும் இல்லை. உயிரிழந்த உறவுகளை நினைவுகூருவதற்கு யாரும் தடுக்க முடியாது. எனவே மக்களின் உரிமையை இந்த அரசு நிலைநிறுத்த வேண்டும் - என்றார். (ப-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூதாட்டத்துக்கு களம் அமைக்கவா கொழும்பு துறைமுக நகர சட்டவரைவு?

## கேள்வி எழுப்புகிறார் ரணில்



**கொழும்பு, ஏப். 27**

**சூதாட்டத்துக்கு களம் அமைத்துக் கொடுத்து கறுப்புப் பணத்தை வெள்ளையாக்கவே முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. நாட்டின் பொருளாதாரம் மீளவும் சரிவைச் சந்திக்கப்போகின்றது. இவ்வாறு முன்னாள் பிரதமரும், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**

கொழும்பு துறைமுக நகர் ஆணைக்குழு சட்டவரைவு தொடர்பில் காணொலி ஊடாக விசேட அறிவிப்பை வெளியிட்டுள்ள அவர் மேற்படி விடயங்களை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஜனாதிபதியாக மஹிந்த ராஜபக்ச இருந்த 2011ஆம் ஆண்டில், வரி ஒழுக்கமற்ற, கறுப்புப் பணத்தைச் சேகரிக்கும் மத்திய நிலையம் என்ற நிலைக்கு இலங்கை தள்ளப்பட்டது. 2015ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்தின் பின்னர் அந்த நிலைமையிலிருந்து இலங்கையை மெதுவாக மீட்டெடுத்தோம். 2018ஆம் ஆண்டு முற்றாகவே விடுவித்தோம். இந்த நிலைமை எதிர்காலத்தில் தொடர்ந்து பாதுகாக்கப்படுமா என்ற அச்சம் தற்போது மேலோங்கியுள்ளது.

ஆசியாக் கண்டத்தில் ஜப்பானின் டோக்கியோ, ஹொங்கொங் மற்றும் சிங்கப்பூரில் நிதி மத்திய நிலையங்கள் காணப்படுகின்றன. அந்த நாடுகள் தங்களின் நிதி மத்திய நிலையங்களில் சூதாட்டச் செயற்பாட்டுக்கு அனுமதி வழங்கவில்லை. அந்த நாடுகளின் மத்திய வங்கிகளே நிதி மத்திய நிலையங்களின் நிதிச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துகின்றன.

ஆனால் இலங்கையின் நிதி மத்திய நிலையமாக உருவாக்கப்படும் கொழும்பு துறைமுக நகருக்கான பொருளாதார ஆணைக்குழுவை நியமிக்கும் சட்டவரைவின் ஊடாக மத்திய வங்கியின் அதிகாரம் அந்தப் பிரதேசத்தினுள் முழுமையாக நீக்கப்படுகின்றது. நாடாளுமன்றத்துக்கு பொறுப்புச் சொல்லும் அதிகாரமும் நீக்கப்படுகின்றது.

சூதாட்டங்களுக்கு அனுமதி வழங்குவது தொடர்பில் முடிவெடுக்கும் பொறுப்பு நிதி அமைச்சருக்குரியது. ஆனால் இங்கு நிதி அமைச்சரின் அதிகாரம் எதுவும் கொழும்புத்துறைமுக நகருக்குள் செல்லாது. இது இலங்கை மீண்டும் வரி ஒழுக்கமற்ற நாடாக மாறும் அபாயத்தை எடுத்துக்காட்டுகின்றது என்று அந்தக் காணொலியூடாக ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார். (ஒ.இ)

# சர்ச்சைக்கு மத்தியில் வருகிறார் சீனாவின் பாதுகாப்பு அமைச்சர்

கொழும்பு, ஏப். 27

கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு தொடர்பான சட்டவரைவு சர்ச்சையில் சிக்கியுள்ள சூழலில், சீனப் பாதுகாப்பு அமைச்சர் இரு நாள் பயணமாக இலங்கையை இன்று வந்தடையவுள்ளார்.

சீன நிறுவனத்தின் முதலீட்டில் அமைக்கப்பட்டுள்ள கொழும்பு துறைமுக நகரத்துக்கான பொருளாதார ஆணைக்குழு சட்டவரைவுக்கு எதிர்க்கட்சிகள் போர்க்கொடி தூக்கியுள்ளன. இலங்கையை சீனாவின் 'காலனியாக' மாற்ற இடமளிக்க முடியாது என்று குரல் எழுப்பப்பட்டு வரும் நிலையில், சீனாவின் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் வெய் பெங் இன்று இலங்கைக்கு வருகைதருகின்றார்.

சீன முதலீட்டில் இலங்கையில் மேற்கொள்ளப்பட்டுள்ள அம்பாந்தோட்டை துறைமுகம், கொழும்பு துறைமுகநகர் என்பவற்றை தனது இருநாள் பயணத்தின்போது அவர் பார்வையிடவுள்ளார்.

இதேவேளை ஜனாதிபதி கோத்தாபய, பிரதமர் மஹிந்த உள்ளிட்டவர்களுடனும் அவர் சந்திப்பும் நடத்தவுள்ளார். (ஒ.இ)



# யாழ். இந்தியத் தூதுவர் மலையகத்துக்கு பயணம்

ஹற்றன், ஏப். 27

யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் தூதரகத்தின், துணைத் தூதுவர் சங்கர் பாலச்சந்திரன் மலையகத்துக்குப் பயணித்துள்ளார்.

ஹற்றனில் உள்ள தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்துக்குச் சென்ற அவர், அங்கு விவரங்களைக் கேட்டறிந்தார்.

தொடர்ந்து கொட்டகலைப் பகுதியில் உள்ள தேயிலைத் தொழிற்சாலை ஒன்றுக்குச் சென்று, அங்கு தேயிலைத் தூள் எவ்வாறு உற்பத்தி செய்யப்படுகின்றது என்பதைப் பார்வையிட்டார். முதல் முறையாக லயன் குடியிருப்புகளுக்குச் சென்று அங்கு உள்ள இந்திய வம்சாவளி மலையக மக்களையும் சந்தித்தார். எதிர்வரும் காலங்களில் பத்தாயிரம் இந்திய வீடமைப்புத் திட்டத்துக்கான ஆரம்பப் பணிகள் தொடர்பிலும் மக்களிடம் தெளிவுபடுத்தினார்.

சந்திப்பில் கண்டிக்கான பதில் இந்தியத் தூதுவர் கிருஷ்ணபிரசாத், கொட்டகலைப் பிரதேச சபை உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். (ம-4)

# முறைகேடுகளின் மொத்த மையமாக கொழும்புத் துறைமுக நகரம் மாறும்

## ஜே.வி.பி. எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 27



ஒட்டுமொத்த முறைகேடுகளின் மையமாக கொழும்புத் துறைமுக நகரம் எதிர்காலத்தில் மாறுவதற்கு வாய்ப்பு இருக்கின்றது. இதனை மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டவரைவை நிறைவேற்ற அனுமதிக்கக்கூடாது. இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

கட்சியின் கொழும்பு அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

இலங்கையில் தற்போதுள்ள சட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாக வெளிநாட்டவர்கள் முதலீடு செய்யமுடியும். ஆனால் முதலீட்டுக்காக இலங்கையிலுள்ள அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுக்கவேண்டும். இதனாலேயே வெளிநாட்டவர்கள் இங்கு முதலீடு செய்வதற்குப் பின்னடிக்கின்றார்கள். அரசின் தலைவர்கள் இதனைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

இலங்கை அரசு சீனாவுக்கு அடிபணிந்துள்ளது. அவர்களின் கடன்பொறிக்குள் சிக்கிக்கொண்டுள்ளார்கள். சர்வதேச சமூகம் சீனாவின் கடன்பொறிக்கு உதாரணமாக இலங்கையை எடுத்துக்காட்டும் நிலைமையே காணப்படுகின்றது.

கொழும்பு துறைமுக நகரில் ரூபாவில் முதலீடு செய்யமுடியாது. இதன் ஊடாக இலங்கையிலிருந்து தனித்த ஒரு பகுதியாகவே கொழும்பு துறைமுக நகரம் அடையாளப்படுத்தப்படும். அப்படியானால், ஜனாதிபதி கோத்தாபயவின் ஒரு நாடு ஒரு சட்டம் எங்கே?, என்று அவர் கேள்வி எழுப்பினார். (ஒ.இ)

# 18 வயதானதும் வாக்காளராக பதிவு செய்வதற்கு வசதி

கொழும்பு, ஏப். 27

18 வயதை எட்டியவர்கள் வாக்களிப்பதற்கான தகுதியான வயதை அடைந்தவுடன், தமது பெயர்களை வாக்காளர் பதிவேட்டில் சேர்க்க முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வாக்காளர் பதிவுகள் ஆண்டுக்கு ஒரு முறைக்கு என்பதற்குப் பதிலாக, ஆண்டுக்கு மூன்று முறை புதுப்பிக்கப்படும் என்ற நடைமுறையின் அடிப்படையில் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. 18 வயதை எட்டியவர்கள் இரண்டு வாரங்களுக்குள், அந்தந்த மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் தமது பதிவுகளைச் செய்ய முடியும். இது தொடர்பான பிரேரணையை ஏற்கனவே பிரதமர் மஹிந்த ராஜபக்ச நாடாளுமன்றில் சமர்ப்பித்துள்ளார். அத்துடன் இது தொடர்பான வர்த்தமானி மூன்று மொழிகளிலும் வெளியிடப்படும். அதனடிப்படையில் எதிர்காலத்தில் நடைபெறவிருக்கும் தேர்தல்களில் அதிக மக்கள் வாக்களிக்கத் தகுதி பெறுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ம-4)

# எதிர்க்கட்சியினரை ஒடுக்க அரசு முயற்சி

## எரான் விக்கிரமரத்ன சாடல்

கொழும்பு, ஏப். 27

அரசின் பொட்டுக்கேடுகளை எதிர்க்கட்சியினர் அம்பலப்படுத்தி வருவதால் அவர்களைக் கைதுசெய்து ஒடுக்கும் நடவடிக்கைகளை அரசு ஆரம்பித்துள்ளது. ஜனநாயகத்துக்கு சாவு மணியடிக்கும் இவ்வாறான வேலைகளில் ஈடுபடவேண்டாம் என்று அரசை எச்சரிக்கின்றோம். இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பிலேயே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

அரசின் தோல்விகளை எதிர்க்கட்சிகள் அம்பலப்படுத்துகின்றன. அதனால் அரசு தற்போது ஆடிப்போயுள்ளது. நாடாளுமன்ற சிறப்புரிமையை மீறி எதிர்க்கட்சியினரைக் கைது செய்வதற்கு அரசு துடிக்கின்றது.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் பல விடயங்களை அம்பலப்படுத்திய ஹரின் பெர்னாண்டோவை குற்றப் புலனாய்வுப் பிரிவில் முன்னிலையாகுமாறு பணிக்கப்பட்டுள்ளது.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் ரிஷாத் கைதுசெய்யப்பட்டுள்ளார். ஆனால் இது தொடர்பில் விசாரணை நடத்திய ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில் அவருக்கு எதிராக சாட்சியங்கள் இல்லை என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.


இது எதிர்க்கட்சியினரைத் திட்டமிட்டு பழிவாங்கி ஒடுக்கும் செயல்- என்றார். (ஒ.இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா மாவட்டத்தில் 18 பேருக்கு கொரோனா

**வவுனியா, ஏப். 27**

**வவுனியா மாவட்டத்தில் 18 பேருக்கு கொரோனாத் தொற்று நேற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. வவுனியா பூந்தோட்டம் கல்வியியல் கல்லூரியில் அமைந்துள்ள தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்கவைக்கப்பட்டுள்ள 18 பேருக்கே இவ்வாறு தொற்று இருக்கின்றமை உறுதி செய்யப்பட்டுள்ளது.**



வெளிநாடுகளிலிருந்து அழைத்து வரப்படுபவர்கள் மற்றும் தென்பகுதிகளைச் சேர்ந்த பலர் தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். அவர்களில் பலரிடம் இரண்டு தினங்களுக்கு முன்னர் பி.சி.ஆர். பரிசோதனைக்கான மாதிரிகள் பெறப்பட்டு அவை பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

அதனடிப்படையில் 18 பேருக்கு தொற்று இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. (ஒ,110)

## போக்குவரத்துக்கு கட்டுப்பாடே ஆபத்தான நிலைமைக்கு தீர்வு

*மருத்துவ அதிகாரிகள் சங்கம் சுட்டிக்காட்டு*

கொழும்பு, ஏப். 27

நாட்டில் பல பகுதிகளிலும் தற்போது அதிகளவான கொரோனாத் தொற்றாளர்கள் இனங்காணப்படுகின்றனர். இந்த ஆபத்தான நிலைமையிலிருந்து விடுபடுவதற்கு, மக்கள் மத்தியில் போக்குவரத்துக் கட்டுப்பாடுகளை விதிப்பதே தீர்வாக அமையும் இவ்வாறு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்க அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், மருத்துவர் நவீன் டி சொய்சா மேலும் தெரிவிக்கையில்,

தொற்றாளர்களாக இனங்காணப்பட்ட நபர்களால் எவ்வித சிக்கலும் ஏற்படாது. எனினும் தொற்றுக்குள்ளாகி இனங்காணப்படாத நபர்களால் பெரும் அபாயம் காணப்படுகிறது. எனவே மக்கள் ஒவ்வொருவரும் தத்தமது பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொள்ளும் வகையில் செயற்பட வேண்டும். மக்களின் ஒத்துழைப்புடனும், அரசால் விதிக்கப்படுகின்ற போக்குவரத்துக் கட்டுப்பாடுகளின் அடிப்படையிலும் தற்போதுள்ள நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியும். இந்தியாவில் தற்போது ஏற்பட்டுள்ள மிக ஆபத்தான நிலைமையைக் கவனத்தில் கொண்டு, வரும் அபாயத்தை உணர்ந்து மக்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

போக்குவரத்துச் சட்ட திட்டங்களை நடைமுறைப்படுத்தல், தனிமைப்படுத்தல் செயற்பாடுகள் மற்றும் வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்து வருதல் உள்ளிட்டவை தொடர்பில் அரசு மதிப்பீடு செய்ய வேண்டும் - என்றார். (ம-4)

## தனிமையில் இருந்த பெண் உயிரிழப்பு

*கிளிநொச்சியில் பரபரப்பு*

கிளிநொச்சி, ஏப்.27

கிளிநொச்சியில் தனிமைப்படுத்தலில் இருந்த 47 வயதுடைய பெண் ஒருவர் உயிரிழந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியது.

குறித்த பெண்ணின் இறப்புத் தொடர்பில், பரிசோதனைகளுக்காக அவரிடமிருந்து பெறப்பட்ட மாதிரிகள் அனுப்பி வைக்கப்பட்ட நிலையில் கொவிட் தொற்று உறுதிப்படுத்தப்படவில்லை என மருத்துவமனைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஓமானிலிருந்து நாடு திரும்பிய நிலையில் குறித்த பெண் இரணைமடு விமானப்படை தனிமைப்படுத்தல் நிலையத்தில் கண்காணிக்கப்பட்டு வந்துள்ளார். அவருக்கு ஏற்பட்ட திடீர் நோய் காரணமாக கிளிநொச்சி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்ற நிலையிலேயே உயிரிழந்துள்ளார்.

பெண்ணின் உயிரிழப்பு தொடர்பில் கிளிநொச்சியில் பதற்றமான நிலை காணப்பட்டது. எனினும் மருத்துவ அறிக்கை கிடைக்கப்பெற்றுள்ளது எனவும், அவர் கொவிட் தொற்றால் உயிரிழக்கவில்லை எனவும் மருத்துவ அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்று மருத்துவமனைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. உயிரிழந்த பெண் பாணந்துறை பகுதியைச் சேர்ந்த 47 வயதுடையவர் என்று தெரிவிக்கப்பட்டது. (ப-6)

## ரஷ்யத் தடுப்பூசி விரைவில் வரும்

கொழும்பு, ஏப். 27

7 மில்லியன் ரஷ்யத் தடுப்பூசிகள் இலங்கைக்கு இரண்டொரு தினங்களில் வரும் என்று இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் அனுமதிக்கு அமைவாக 69.65 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் 7 மில்லியன் தடுப்பூசிகள் ரஷ்யாவிடம் கொள்வனவு செய்யப்பட்டன. அவையே இலங்கைக்கு விரைவில் எடுத்து வரப்படவுள்ளன. (ஒ.இ)

## ஆலயங்களில் ஒன்றுகூடத்தடை?

கொழும்பு, ஏப். 27

ஆலயங்களில் வழமைப் பிரார்த்தனைகளையோ, ஒன்றுகூடலையோ நடத்த அனுமதிக்கக்கூடாது என்று இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதேவேளை கூட்டுப் பிரார்த்தனைகள், திருவிழாக்கள் அல்லது திருமண வைபவம் போன்ற ஒன்று கூடல்களை நடத்தும் தேவை ஏற்படும்போது, பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகரின் அனுமதியை பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் திணைக்களம் வலியுறுத்தியுள்ளது. (ம-4)

## தம்புள்ள பொ.ம.நி மூன்று நாள்கள் பூட்டு

கொழும்பு, ஏப்.27

தம்புள்ள பொருளாதார மத்திய நிலையம் வரும் மூன்று நாள்களுக்கு மூடப்படுகிறது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தம்புள்ள பொருளாதார மத்திய நிலையத்தில் 43 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதியானதையடுத்து நேற்றுமுன்தினம் முதல் வரும் மூன்று நாள்களுக்கு பொருளாதார மத்திய நிலையம் மூடப்படுகிறது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ப)

*22 மாவட்டங்களில்*

## கொரோனாத் தொற்று தீவிரம் இரு வாரங்களுக்கு அவதானம்

*சுகாதாரத்துறை எச்சரிக்கை*

கொழும்பு, ஏப். 27

இலங்கையில் 22 மாவட்டங்களில் கொரோனாத் தொற்று தீவிரமாகப் பரவி வருகின்றது. எதிர்வரும் 2 வாரங்கள் மிக முக்கியமானவை. மக்கள் அவதானமாக இருக்கவேண்டும். இவ்வாறு சுகாதார அமைச்சு எச்சரித்துள்ளது.

ஒவ்வொரு நாளும் 800 தொடக்கம் 900 பேர் வரையில் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டு வருகின்றனர். புத்தாண்டு காலத்தில் கொரோனாக் கட்டுப்பாட்டு விதிகளை மக்கள் உரிய முறையில் பின்பற்றத் தவறியதால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டியுள்ள சுகாதார அமைச்சு எதிர்காலத்தில் இந்த நிலைமை மோசமாகாமல் இருக்க மக்கள் சுய கட்டுப்பாட்டுடன் இருக்கவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது. இதேவேளை தேவையற்ற பயணங்கள், சுற்றுலாக்களைத் தவிர்க்குமாறுச் சுகாதார அமைச்சு கோரியுள்ளது. (ஒ.இ)

*கிளிநொச்சி மருத்துவமனை*

## சத்திர சிகிச்சைக்கூட தாதிக்கு கொரோனா

கிளிநொச்சி, ஏப்.27

மொரட்டுவ பகுதியில் முச்சக்கரவண்டிச் சாரதி ஒருவர் கொரோனாத் தொற்றால், அடையாளம் காணப்பட்டுள்ளார். அவருடன் பழகியவர்கள் தொடர்பில் சாரதியை விசாரணைக்கு உட்படுத்தியபோது, அவரது முச்சக்கரவண்டியில் குறித்த தாதி பயணித்தது தொடர்பில் அவர் கூறியுள்ளார்.

இதனை அடுத்து தாதியும் அவரது குடும்பத்தினரும் தனிமைப்படுத்தப்பட்டனர். திருகோணமலை பகுதியில் உள்ள தாதியின் குடும்பத்தினருக்கு கடந்த வெள்ளிக்கிழமை தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் தாதியின் மாதிரிகள் நேற்றுமுன்தினம் மீண்டும் சேகரிக்கப்பட்ட நிலையில் நேற்று அவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. தாதியுடன் நெருங்கிப் பழகிய 7 ஊழியர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி மருத்துவமனையில் அவசர சிகிச்சைக்காக அனுமதிக்கப்படும் நோயாளர்களுக்கான சத்திர சிகிச்சை தவிர்ந்து ஏனைய திட்டமிடப்பட்ட சத்திர சிகிச்சைகள் வரும் 30ஆம் திகதிவரை மட்டுப்படுத்தப்பட்டுள்ளன என்று பொறுப்பு வாய்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ப-6)

## தானசாலைகளை அமைக்க வேண்டாம்

*மக்களிடம் கோரிக்கை*

கொழும்பு, ஏப். 27

வெசாக் காலப் பகுதியில் தானசாலைகள் மற்றும் பந்தல்கள் அமைப்பதை மக்கள் தவிர்க்க வேண்டும் என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

தற்போதைய கொரோனாத் தொற்று நிலைமைகள் காரணமாக, மக்களை ஒன்றுகூட்டும் பந்தல்களை அமைக்க வேண்டாம். அதேவேளை வட மத்திய மாகாணத்தை நோக்கிய யாத்திரைப் பயணங்களையும் மக்கள் தவிர்க்க வேண்டும். தற்போதைய சூழலில் சுகாதார அதிகாரிகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் சங்கத்தின் பொதுச்செயலாளர் உபுல் ரோஹண தெரிவித்துள்ளார். (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு துறைமுகநகர் தொடர்பில் மக்களுக்கு தெளிவை வழங்குங்கள்

## மகா சங்கத்தினர் கோரிக்கையாம்

**கொழும்பு, ஏப். 27**

**கொழும்பு துறைமுகநகர் தொடர்பில் மக்களைத் தெளிவுபடுத்துமாறு மகாசங்கத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.**

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையில் மகாசங்கத்தினருடனான கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில்,

இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் கொழும்புத் துறைமுக நகரத் திட்டம் தொடர்பாக விரிவாக தெளிவுபடுத்தியதுடன் பொருளாதாரத்துக்கும் நாட்டுக்கும் கிடைக்கும் பயன்கள் பற்றியும் கருத்து தெரிவித்தார்.

நில அளவை விரிவுபடுத்தி புதிய முதலீடுகளுக்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்துதல் ஒரு நாடு என்ற வகையில் பெற்றுக்கொள்ளும் மிகப் பெரிய வெற்றியாகும். தவறான கருத்துக்களைப் பரப்பி அனைத்தையும் எதிர்ப்பதற்கு பதிலாக ஒரு தேசமாக முன்னேறு வதற்கு அனைவரும் ஒன்றுபட வேண்டும். இவ் அபிவிருத்தித்திட்டம் தொடர்பாக மக்களுக்கு சரியான தெளிவை வழங்கி, அதற்கான ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ள வேண்டுமென்று தேரர்கள் சுட்டிக்காட்டினர் - என்றுள்ளது. (ஒ.இ)

# இந்திய - இலங்கை மீனவர் பிரச்சினை; இராஜதந்திர ரீதியில் தீர்க்க முடியுமாம்

கொழும்பு, ஏப்.27

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறிய மீன்பிடிச் செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற இந்திய மீனவர்களைக் கைதுசெய்யுமாறு கடற்படைக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. இவ்விவகாரம் இரு நாடுகளுடன் தொடர்புடையது என்பதால், இராஜதந்திர ரீதியிலேயே இதற்கு தீர்வு காண வேண்டும் என்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

தேசிய மீனவர் சம்மேளனத்தின் பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்;

இந்திய மீனவர்களின் அத்துமீறல்களுக்கு துணைபோகின்றேன் என சில ஊடகங்கள் என் மீது ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளைச் சுமத்தி வருகின்றன. இந்திய அரசால் முன்வைக்கப்பட்ட சில ஆலோசனைகள் தொடர்பாகவே நான் கருத்து தெரிவித்திருந்தேன். அந்தக் கருத்துக்கள் திரிபுபடுத்தப்பட்டுள்ளன. இந்தியாவின் ஆலோசனை தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லை. இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்களைக் கைதுசெய்யுமாறு நான் தொடர்ந்து கடற்படையினருக்கு ஆலோசனை வழங்கி வருகின்றேன். இப் பிரச்சினை இரண்டு நாடுகள் சம்பந்தப்பட்டதாகும். இதனை இராஜதந்திர முறையிலேயே தீர்க்க வேண்டும்.

நான் ஒரு தமிழ் அமைச்சராக இருந்த போதும், ஜனாதிபதியும் பிரதமரும் என்மீது நம்பிக்கை வைத்து தேசிய முக்கியத்துவம் வாய்ந்த அமைச்சை வழங்கியுள்ளனர். எனவே அனைத்து இனங்களுக்கும் எவ்வித பாகுபாட்டையும் காண்பிக்காமல் சேவையாற்றுவேன்.

கடற்றொழிலாளர்கள் தற்போது எதிர்நோக்கி வரும் பிரச்சினைகளுக்கான உரிய தீர்வை நிச்சயமாகப் பெற்றுக்கொடுப்பேன்.

கடற்றொழிலாளர்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் எந்தவொரு தீர்மானமும் எடுக்கப்படமாட்டாது. என்னுடைய தவறுகளை சுட்டிக்காட்டினால் அதில் உண்மை இருந்தால் நான் மன்னிப்பு கேட்கவும் தயங்கமாட்டேன். ஆனால் என் மீதான பொய்க் குற்றச்சாட்டுகளை நான் ஒரு போதும் பொருட்படுத்தப் போவதில்லை என்றார். (ப)

# சுகாதார விதிமுறைகளை மீறும் பள்ளிகளை மூடுவதற்கு தீர்மானம்

கொழும்பு, ஏப். 27

கொவிட்-19 செயலணி மற்றும் சுகாதார அமைச்சு வழங்கியுள்ள சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றத் தவறும் பள்ளிவாசல்களை நோன்பு முடியும்வரை மூடுவதற்கு வக்பு சபை தீர்மானித்துள்ளது.

நாட்டின் பல பகுதிகளில் அநேகமான பள்ளிவாசல்களில் கொவிட் - 19 தொடர்பான சுகாதார வழிகாட்டல்கள் மீறப்படுகின்றன என்றும், பெரும் எண்ணிக்கையானோர் பள்ளிவாசல்களுக்குள் சுகாதார வழிகாட்டல்களை அசட்டை செய்கின்றேன் என்றும் வக்பு சபைக்கு ஆதாரங்களுடன் முறைபாடுகளை முன்வைத் திருப்பதனாலேயே இவ்வாறான தீர்மானமொன்றை மேற்கொள்ள வேண்டியேற்பட்டுள்ளது என்று வக்பு சபையின் தலைவர் சட்டத்தரணி சப்ரி ஹலீம்தீன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நோன்பு காலத்தில் பள்ளிவாசல்களில் பேணப்பட வேண்டிய சுகாதார வழிகாட்டல்கள் தொடர்பில் சுற்றிக்கையொன்று அண்மையில் வெளியிடப்பட்டுள்ளது. அவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ள விடயங்கள் மீறப்பட்டுள்ளன என்று ஆதாரங்கள் மற்றும் புகைப்படங்கள் மூலம் வக்பு சபைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. இவ்வாறான சூழ்நிலையே நாட்டில் கொவிட் 19 மூன்றாவது அலை உருவாகக் காரணமாக இருந்தது என்ற குற்றச்சாட்டு எம்மீது சுமத்தப் படலாம். அதனால் பள்ளிவாசல்கள் நோன்பு காலத்தில் வழங்கப்பட்டுள்ள சுகாதார வழிகாட்டல்களை முழுமையாகக் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும். பள்ளிவாசல்களில் சுகாதார வழிகாட்டல்கள் மீறப்படுகின்றமைக்கு பள்ளிவாசல் நிர்வாகங்களே பொறுப்புக் கூறவேண்டும். இவ்வாறான நிலையில் வக்புசபை குறிப்பிட்ட பள்ளிவாசல்களை நோன்புக் காலத்தில் மூடாமல் இருப்பதற்காக அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் - என்றார். (ப)

# செவ் இளநீருக்கு சந்தையில் மவுசு

யாழ்ப்பாணக் குடாநாட்டில் செவ் இளநீருக்கு நல்ல மவுசு ஏற்பட்டுள்ளது. அதிகளவான செவ் இளநீர்கள் தெற்கில் இருந்தே குடாநாட்டுக்கு எடுத்து வரப்படுகின்றன.

கடந்த புத்தாண்டு தினத்துக்கு பின்னர் செவ் இளநீரை வியாபாரிகள் எடுத்து வராதமையால் அவற்றுக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதோடு, விலையும் அதிகரித்து காணப்படுகின்றது.

செவ் இளநீர் ஒன்று 150 ரூபா வரை விற்கப்படுகின்றது..

தற்போதைய கடும் வறட்சி மற்றும் வெப்பத்தால் நுகர்வோர் கூடுதலாக செவ் இளநீரை அதிகம் வாங்கி பருகி வருகிற்றமையை காணக் கூடியதாக உள்ளது. (ஐ-17)

# கிராமத்திற்குள் புகுந்த சிறுத்தையால் பரபரப்பு



கிளிநொச்சி, ஏப்.27

கிளிநொச்சி ஆனந்தபுரம் கிழக்கு பகுதியில் கிராமத்துக்குள் நுழைந்த சிறுத்தையால் அப்பகுதியில் பரபரப்பு நிலவியது. இதனை அடுத்து குறித்த பகுதிக்கு வருகை தந்த வன ஜீவராசிகள் திணைக்கள ஊழியர்களால் சிறுத்தை பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டது. சம்பவம் கடந்த சனிக்கிழமை காலை இடம்பெற்றது. கரைச்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஆனந்தபுரம் கிழக்கு பகுதியில் நாகராஜா செந்தில்குமரன் என்பவரது குடியிருப்பு பகுதிக்குள்ளேயே சிறுத்தை நுழைந்துள்ளது. குறித்த நபரின் வளர்ப்பு நாய் வழமைக்கு மாறாக குரைத்ததற்கு அமைய அவர் சுற்றுச் சூழலைப் பார்வையிட்டுள்ளார். நாய் குரைக்கும் திசையில் குறித்த சிறுத்தை அருகிலிருந்த மரத்தின் மீது ஏறி இருப்பதை அவதானித்த அவர், இவ் விடயம் தொடர்பில் படையினருக்கு தகவல் வழங்கியுள்ளார். இதனை அடுத்து அங்கு வந்த படையினர் சிறுத்தையை அவதானித்தது டன், சம்பவம் தொடர்பில் வன ஜீவராசிகள் திணைக் களத்தின் கவனத்துக்கும் கொண்டு சென்றுள்ளனர். இதனைத் தொடர்ந்து அப் பகுதிக்கு வந்த வன ஜீவராசிகள் திணைக்களத்தினர் சிறுத்தையை பாதுகாப்பாக வெளியேற்ற நடவடிக்கை மேற்கொண்டனர். நீண்ட முயற்சியின் பின்னர் சிறுத்தை வெளியேறியது. (ஐ-6)

# ஒவ்வொரு நிமிடத்துக்கும் ஒவ்வொரு லட்சம் செலவு

## சபாநாயகர் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஏப். 27

நாடாளுமன்ற அமர்வின் ஒவ்வொரு நிமிடத்துக்கும் சுமார் ஒவ்வொரு லட்சம் ரூபா செலவிடப்படுகிறது. என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன கடந்த வெள்ளிக்கிழமை தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ தொடர்பாக எழுந்த வாதங்களைத் தொடர்ந்து கருத்து வெளியிட்ட சபாநாயகர், ஒத்திவைப்பு வேளை விவாத நாள் ஆரம்பித்து 47 நிமிடங்கள் கடந்துவிட்டன என்றும், ரஞ்சித் மத்தும பண்டார தலைப்பில் இருந்து விலகி வருகிறார் என்றும் தெரிவித்தார். "தேவையற்ற வாதத்தால் ரூ.4.7 மில்லியன் ரூபா பொது நிதி வீணடிக்கப்பட்டது" என்றும் சபாநாயகர் தெரிவித்தார். (கு-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகாதார நடைமுறைகளை மீறி பயணிகளை ஏற்றிச்செல்லும் பஸ்கள்

## கவனம் செலுத்துமாறு கோரிக்கை

**வவுனியா, ஏப். 27**

**வவுனியாவில் சுகாதார நடைமுறைகளைப் பேணாமல் பேருந்துகளில் அதிகளவு பயணிகள் ஏற்றப்படுகின்றனர் என குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.**

கொவிட்-19 தாக்கம் மற்றும் அது தொடர்பில் முன்னெடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள், தொடர்பான விசேட கலந்துரையாடல் வவுனியா மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதன்போது கல்வித்துறை சார்ந்த உத்தியோகத்தர் ஒருவரால் குறித்த குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக; பேருந்துகளில் அதிகமான பயணிகள் ஏற்றிச்செல்லப்படுவதுடன், எந்தவித சுகாதார நடைமுறைகளும் பின்பற்றப்படுவதுல்லை. அதனை கண்காணிப்பதற்கும் சரியான திட்டங்கள் வகுக்கப்படவில்லை. எனவே பேருந்துகளை கண்காணிப்பதற்கு சிறந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்படவேண்டும். இந்தச் செயற்பாட்டால் பாடசாலை மாணவர்களும் பாதிக்கப்படுகின்றனர் எனத் தெரிவித்தார்.

இதன்போது அரச அதிபர் "பொதுப் போக்குவரத்து சேவைகளில் பேருந்துகளின் இருக்கைகளின் எண்ணிக்கைக்கு பயணிகளை ஏற்றுவது தொடர்பாக பேருந்து தரப்பினர் கவனம் செலுத்தவேண்டும்" என்று தெரிவித்தார். (ச-110)

# வவுனியாவில் 193 பேர் சுயதனிமைப்படுத்தலில்

## நடைமுறைகள் தொடர்பிலும் அறிவிப்பு

வவுனியா, ஏப். 27

வவுனியாவில் 68 குடும்பங்களைச் சேர்ந்த 193 பேர் சுயதனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர் என்று மாவட்டச் செயலர் சமன் பந்துலசேன தெரிவித்தார்.மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

வவுனியாவில் கடந்த வருடம் 11 ஆயிரத்து 168 பி.சி.ஆர். பரிசோதனைகளும், இந்த வருடத்தில் 8 ஆயிரத்து 565 பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அந்தவகையில் இதுவரை 436 தொற்றாளர்கள் இனங் காணப்பட்டுள்ளனர். மூன்று இறப்புக்கள் பதிவாகியுள்ளன. தற்போது வெளிநாடுகளில் இருந்து வருகைதந்த 528 பேர் வவுனியாவில் அமைந்துள்ள மூன்று தனிமைப்படுத்தல் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். அத்துடன் 68 குடும்பங்களைச் சேர்ந்த 193 பேர் சுயதனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

கொரோனா மூன்றாவது அலை என்ற வகையில் கட்டாயமாகப் பின்பற்றவேண்டிய சில நடைமுறைகள் இருக்கின்றன. ஒரு குடும்பத்தில் இரு நபர்களே வீட்டிலிருந்து வெளியில் செல்வதற்கு அனுமதிக்கப்படுவர். உங்களுக்கு மாவட்ட அல்லது பிரதேச செயலகங்களில் இருந்து கடமைகள் தேவைப்படுமாக இருந்தால். சமுர்த்தி அலுவலர், அபிவிருத்தி அலுவலர் மற்றும் கிராம அலுவலர் ஆகியோரிடம் உங்கள் பிரச்சினைகளை நேரடியாகத் தெரிவித்து மாவட்டச் செயலர் அல்லது பிரதேச செயலரின் பதிலைப் பெற்றுக்கொள்ளமுடியும். நகருக்கு வரவேண்டியத் தேவையில்லை.

அத்துடன் கற்றல் நடவடிக்கைகள் அதிபர்களுக்கு வழங்கப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு அமைய நடைமுறைப்படுத்தப்படவேண்டும். அத்துடன் வடக்குக்கு பிரவேசிக்கும் பிரதான வாயில்களில் பாதுகாப்புத் தரப்பினர் கடமையில் ஈடுபடுத்தப்படுவர். அவர்களுக்கு உங்களது ஒத்துழைப்புகளை வழங்கவேண்டும். தற்போது நோன்பு கடைப்பிடிக்கப்படுகின்றது. நோன்பு வழிபாடுகளில் 50 பேர் மாத்திரம் அனுமதிக்கப்படுவார்கள். திருமண வைவங்களில் 150 பேர் மாத்திரமே அனுமதிக்கப்படுவர். இறப்பு வீடுகளில் 25 வீதமானவர்களே கலந்துகொள்ள முடியும்.

ஒப்பந்த தாரர்கள் தமது பணிகளை விதிமுறைகளுக்கு அமைய முன்னெடுத்துச்செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது. கிராமிய மட்டத்திலே குழுக்களை வலுவூட்டுவதன் ஊடாக கிராமங்களின் பாதுகாப்பை முன்னெடுப்பதற்கான ஒத்துழைப்புகளை எதிர்பார்க்கின்றோம். இவ்வாறான விதிமுறைகளுக்கு கட்டுப்படுகின்ற சந்தர்ப்பத்தில் தான் எமது மாவட்டத்தினதும் நாட்டினதும் மக்களைப் பாதுகாக்கமுடியும்-என்றார். (த-110)

## பொலிஸார் துரத்தியபோது

# ஆசிரியரை மோதிவிட்டுத் தப்பிய சாரதி 3 நாள்களின் பின் கைது

யாழ்ப்பாணம், ஏப். 27

பொலிஸார் துரத்தியபோது, ஆசிரியை ஒருவரை மோதித் தள்ளிவிட்டு தப்பியோடிய டிப்பர் வாகனத்தை எழுதுமட்டுவாழ் பகுதியில் வைத்து நெல்லியடி பொலிஸார் மீட்டனர். அதன் சாரதியையும் கைதுசெய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சாரதியை டிப்பர் வாகனத்துடன் நெல்லியடி பொலிஸார், பருத்தித்துறை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். விபத்து நடைபெற்ற பகுதி பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதி என்பதால் அவர்களிடம் ஒப்படைத்துள்ளனர். பருத்தித்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

வடமராட்சி-திக்கம் பகுதியில் கடந்த 21ஆம் திகதி மாலை 4 மணியளவில் சப்ரகமுவ மாகாண பதிவில் உள்ள LM 5114 எனும் இலக்கமுடைய டிப்பர் வாகனம் பொலிஸாரின் கட்டளையை மீறிச் சென்றபோது, இரண்டு மோட்டார் சைக்கிள்களில் மூன்று பொலிஸார் அதனை துரத்திச் சென்றுள்ளனர். அதன்போது டிப்பர் சாரதி வாகனத்தை திக்கம் பகுதியில் உள்ள சிறிய வீதிகளின் ஊடாக மிக வேகமாகச் செலுத்தி ஓடி தப்பிச் சென்றுள்ளார். அவ்வாறு தப்பிச் செல்லும்போது சிறிய வீதி வளைவில் வாகனத்தைத் திருப்பும்போது எதிரே மோட்டார் சைக்கிளில் வந்த ஆசிரியை ஒருவரை மோதித் தள்ளியதோடு வாகனத்தை நிறுத்தாது தப்பியோடினார்.

டிப்பர் வாகனத்தைத் துரத்தி வந்த பொலிஸாரும் விபத்துக்கு உள்ளான ஆசிரியரை மீட்காது, தொடர்ந்தும் டிப்பர் வாகனத்தை துரத்திச் சென்றுள்ளனர். விபத்துக்கு உள்ளான ஆசிரியரை அந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் மீட்டு, நோயாளிகாவு வண்டி மூலம் பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர். அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக ஆசிரியை யாழ்.போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். குறித்த சம்பவங்கள் அந்தப் பகுதியில் பொருத்தப்பட்டிருந்த சி.சி.ரி.வியில் பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-26)

## வவுனியா மருத்துவமனை

# விபத்துச் சிகிச்சை பிரிவுக்கு 261 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

வவுனியா, ஏப். 27

வவுனியா பொதுமருத்துவமனையில் விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவுக்கான கட்டடம் அமைப்பதற்கு சுகாதார அமைச்சால் 261 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்ட பொதுமருத்துவமனை விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவின் கட்ட கட்டடம், பூர்த்தியாகாமல் நோயாளிகளும் மருத்துவமனை நிர்வாகத்தினரும் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங் கொடுத்து வந்தனர். தற்போது வவுனியா மாவட்ட பொதுமருத்துவமனையில் விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவு பகுதி கட்டடம் அமைப்பதற்காக 261 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட உள்ளன. (ஜ-213)



## ஒட்டுசுட்டான் பகுதியில் குருதிக்கொடை முகாம்

முல்லைத்தீவு, ஏப். 27

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் உள்ள இந்துபுரம் கிராம அலுவலர் பிரிவில் குருதிக் கொடை முகாம் ஒன்று அண்மையில் நடைபெற்றது.


இந்துபுரம் பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெற்ற குருதிகொடை முகாமை செல்வபுரம் மற்றும் இந்துபுரம் கிராம அபிவிருத்திச் சங்கம், பீனிக்ஸ் இளைஞர் கழகம் மற்றும் இளந்தளிர் விளையாட்டுக் கழகம் ஆகியவை இணைந்து ஏற்பாடு செய்துள்ளன. (ஜ-13)

## குருதிக்கொடை முகாம்

கோண்டாவில், ஏப். 27

யாழ்ப்பாணம், கோண்டாவில் துர்க்கா இளைஞர் கழகத்தால் குருதிக்கொடை முகாம் ஒன்று நேற்று நடத்தப்பட்டது. காலை 9 மணி தொடக்கம் மதியம் ஒரு மணிவரை கோண்டாவில் வேத பாராயன சன சமுக நிலையத்தில் குறித்த குருதிக்கொடை முகாம் நடைபெற்றது. உயிரைக்காக்கும் இந்த மகத்தான பணியில் பல இளைஞர்கள் ஆர்வத்தோடு கலந்து கொண்டனர். (ஜ-20)

## முதியவர்களுக்காக பராமரிப்புக் கட்டடம்



கிளிநொச்சி, ஏப். 27

கிளிநொச்சி, வன்னேரிக்குளம் யோகர் சுவாமிகள் திருவடி நிலைய முதியோர் இல்லத்தில் ஆண்களுக்கான விசேட பராமரிப்புக் கட்டடம் கடந்த வெள்ளிக்கிழமை திறந்துவைக்கப்பட்டது.

திருநெல்வேலியைச் சேர்ந்த நடராசா செல்லத்துரை மற்றும் அம்பிகாதேவி நடராசா ஆகியோரின் நினைவாக அவர்களின் குடும்பத்தினரின் நிதிப் பங்களிப்பில் குறித்த பாராமரிப்புக் கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தின் மோகனதாஸ் சுவாமிகள் கலந்துகொண்டு கட்டடத்தைத் திறந்து வைத்தார். குறித்த கட்டடத்தில் சிறப்புத் தேவையுடைய முதியவர்கள் பராமரிக்கப்படவுள்ளனர். (ஜ-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவப்பு எச்சரிக்கைப் பகுதிகளில் கண்காணிப்பை விரைவுபடுத்துக!

## வலியுறுத்துகின்றது மருத்துவ சங்கம்

**கொழும்பு, ஏப். 27**

**கொரோனாத் தொற்று பரவல் காரணமாக சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்ட பகுதிகளை கண்டுபிடிக்க அரசும் சுகாதார அதிகாரிகளும் உடனடியாக கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடவேண்டும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.**

அதேவேளை, தொற்று அடையாளம் காணப்படும் பகுதிகளுக்கு பயணக் கட்டுப்பாடுகளை தாமதமின்றி விதிக்குமாறும் கேட்டுக் கொண்டுள்ளது.

தற்போது பல்வேறு வகையான வைரஸ் வகைகள் உலகில் வேகமாகப் பரவி வருகின்றன. அண்டை நாடான இந்தியா ஏற்கனவே அதிக ஆபத்தை எதிர் கொண்டுள்ளது. புத்தாண்டு காலப்பகுதியில் மக்களின் கவனக் குறைவான நடத்தை காரணமாக உலகளாவிய தொற்று எந்த நேரத்திலும் இலங்கையைப் பாதிக்கலாம். இதன் காரணமாக, நாளாந்தம் அடையாளம் காணப்படும் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது.

தற்போது ஆபத்தில் உள்ள நாட்டில், கொரோனாவைக் கட்டுப்படுத்த, அரசியல் தலைவர்கள், சுகாதாரத் துறையினர் மற்றும் பொதுமக்களின் பங்களிப்பு ஆகியவை அவசியம் - என்று சங்கம் மேலும் வலியுறுத்தியுள்ளது. (த-இ)



# மடுவில் மருத்துவ முகாம்

மன்னார், ஏப். 27

மன்னார் மடு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட சின்ன வலயன்கட்டு மற்றும் பெரிய வலயன்கட்டு கிராமங்களில் கடந்த சனிக்கிழமை மருத்துவ முகாம் நடைபெற்றது. மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் அனுசரணையில் இந்த மருத்துவ முகாம் நடைபெற்றது.

தற்போதைய கொரோனாத் தொற்று நோய் சூழ்நிலையை கருத்தில்கொண்டு மாவட்ட பொது மருத்துவமனையில் பொதுமக்களின் ஒன்றுகூடலை தவிர்ப்பதற்காக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் ஆலோசனைக்கு அமைவாக இந்த மருத்துவ முகாம் நடத்தப்பட்டது. (ஜ-213)



# கையிருப்பிலுள்ள தடுப்பூசிகள் 2 மாதங்களில் காலாவதியாகும்

கொழும்பு, ஏப். 27

இந்தியாவிடமிருந்து பெற்றுக்கொண்ட அஸ்ட்ராஜெனகா தடுப்பூசிகள் கையிருப்பில் உள்ளபோதிலும், அவை எதிர்வரும் ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் காலாவதியாகிவிடும் என்று ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் கொவிட் தடுப்பூசி தொடர்பான ஜனாதிபதி செயலணியின் தலைவருமான லலித் வீரதுங்க தெரிவித்துள்ளார்.

கொவிட் பரவல் தொடர்பான ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

கடந்த ஜனவரி 29ஆம் திகதி முதல் கொவிட் தடுப்பூசி வழங்கும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன. இதுவரையில் 9 இலட்சத்து 25 ஆயிரத்து 242 பேருக்கு கொவிட் தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது. இரண்டாம் கட்ட தடுப்பூசி வழங்குவதற்கு தற்போது கையிருப்பில் உள்ள அஸ்ட்ராஜெனகா தடுப்பூசிகள் போதுமானவையல்ல.

இந்தியாவில் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமையால் தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்வதில் சற்று காலதாமதம் ஏற்பட்டுள்ளது. அஸ்ட்ராஜெனகா தடுப்பூசிகள் மாத்திரமின்றி சைனோஃபார்ம், ஸ்புட்னிக் பைசர் உள்ளிட்டவை தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது - என்றார். (ம-த.இ)

# யாழ். மாவட்டத்துக்கு எழுத்தாளர் சங்கம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப். 27

உலக புத்தக தினமான கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாண மாவட்ட எழுத்தாளர் சங்கம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டச் செயலகத்தில், மாவட்டச் செயலர் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

பதவி வழியாக மாவட்டச் செயலர் பிரதம ஆலோசகராகவும், மாவட்ட மேலதிக செயலர் மற்றும் உதவி மாவட்டச் செயலர் ஆகியோர் ஆலோசகர்களாகவும் செயற்படுவார்கள். மேலும் புகழ்பூத்த பேராசிரியர்கள் மற்றும் மூத்த எழுத்தாளர்கள் ஆலோசகர்களாக இருக்க, சங்கத்தின் தலைவராக சாகித்திய ரத்னா ஐயாத்துரை சாந்தன், செயலாளராக கவிஞர், பன்முக இலக்கியச் செயற்பாட்டாளர் கு.ரஜீவன், பொருளாளராக வ. வடிவழகையன் ஆகியோரும் இன்னும் பல எழுத்தாளர்கள் நிர்வாக உறுப்பினர்களாகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள படைப்பு இலக்கியவாதிகள் அனைவரும் இந்தச் சங்கத்தில் அங்கத்துவம் வகிக்க தகுதியுடையவர்களாவார்கள். ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் ஒவ்வொரு படைப்பிலக்கியகர்த்தாக்கள் நிர்வாக பிரதிநிதிகளாகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த எழுத்தாளர்கள், தங்கள் தங்கள் பிரதேச செயலக கலாசார அபிவிருத்தி அலுவலர்களிடம் அல்லது சங்கத்தின் பிரதேச செயலக பிரிவு பிரதிநிதிகளிடம் அங்கத்துவ விண்ணப்பப் படிவங்களைப் பெற்று, பூர்த்திசெய்து இணைந்து கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

சங்கத்தின் இணைப்பாளராக யாழ்ப்பாண மாவட்ட கலாசார அலுவலர் இ.கிருஷ்ணகுமார் பதவி வழியாக செயற்படுவார். சங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பான அறிவித்தல்கள் எதிர்வரும் 8ஆம் திகதி மற்றும் 15ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள கூட்டங்களின் பின்னர் வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (த-இ)

# செட்டிகுளம் அந்தோனியார் ஆலயத்தின் வீதி சீரமைப்பு



வவுனியா செட்டிகுளம் பெரியகட்டு அந்தோனியார் ஆலயத்தின் வீதி சீரமைப்பு பணிகளை வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் ஆரம்பித்து வைத்தார்.

பெரியகட்டு அந்தோனியார் ஆலயத்தை சூழ உள்ள வீதியுடன், அந்தோனியார் ஆலயத்தினூடாக பெரியகட்டு கிராமம் வரையான சுமார் 8 கிலோ மீற்றர் நீளமான [illegible] இதன்போது அமைக்கப்படவுள்ளது. நிகழ்வில் மன்னார் மறை மாவட்ட ஆயர் இமானுவேல் ஆண்டகை, அந்தோனியார் ஆலயத்தின் பங்குத் தந்தை அருள்நேசன், செட்டிகுளம் பிரதேசசபை தவிசாளர் ஜெகதீஸ்வரன் மற்றும் [illegible] உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (ஐ-110)

# ஈஸ்டர் தாக்குதலுடன் தொடர்புள்ள அனைவரும் கைதுசெய்யப்படுவர்!

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 27

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அறிக்கைப் பிரதிகள், சட்டமா அதிபரிடம் கையளிக்கப்பட்டுள்ளன என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர மேலும் தெரிவிக்கையில்:

2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதல் தொடர்பாக நீண்டகாலமாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன. அந்த விசாரணை அறிக்கையின், எட்டு பிரதிகள் சட்டமா அதிபரிடம் கையளிக்கப்பட்டுள்ளன. குற்றப் புலனாய்வுத் திணைக்களம் மற்றும் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு அதிகாரிகளால் நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் மற்றும் அவரது சகோதரன் ரியாஜ் பதியுதீன் ஆகியோர் தற்போது கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தத் தாக்குதல்களுடன் தொடர்புடையவர்களுக்கு உதவியமை, அவர்களுடன் தொடர்புகளைப் பேணியமை ஆகிய காரணங்களுக்காக இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அதற்கமைய குறித்த அறிக்கையில் குற்றவாளி களாகப் பெயரிடப்பட்டுள்ள அனைவரையும் கைது செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. தாக்குதலுடன் தொடர்புடைய சகலரும் துரிதமாகக் கைதுசெய்யப்படுவர் - என்றார். (ம-4)

# திருப்பி அனுப்பப்பட்டனர் ரியூசன் மாணவர்கள்


வவுனியா, ஏப். 27

வவுனியா நகரின் சில தனியார் கல்வி நிறுவனங்களுக்குச் சென்ற மாணவர்கள் திருப்பி அனுப்பப்பட்டனர். தனியார் கல்வி நிலையங்களில் கல்வி நடவடிக்கைகள் வழமைபோல நடைபெறும் என்றும், மாணவர்களை வகுப்புகளுக்குச் சமுகமளிக்குமாறும் கல்வி நிலையங்களின் ஆசிரியர்கள் கூறியிருந்தனர் என்றும் அதனாலேயே தாங்கள் வந்திருந்தோம் என்றும் மாணவர்கள் கூறினர்.

வவுனியா மாவட்டத்தில் கொரோனாத் தொற்றாளர்கள் அதிகரித்து வருகின்ற நிலையில், மறு அறிவித்தல் வரை தனியார் கல்வி நிலைய வகுப்புகள் மற்றும் பிரத்தியேக வகுப்புக்கள் என்பவற்றுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



பிறப்பு
25 • 03 • 1956

இறப்பு
28 • 03 • 2021

## அமரர் திரு. இராமநாதன் லோகநாதன்

Management Director V V Ramanathan &Company (Pvt) Ltd

**அனைத்துமாய் நின்ற லோகன் மாமாவே........**

மாமா தங்கள் தேகத்திலிருந்து உயிர் பிரிந்து தாங்கள் ஆத்ம சாந்தியினை பெற்றிருந்தாலும், உங்கள் பிரிவு எம்மீது விட்டு சென்ற தாக்கத்தினை நீங்கள் அறிய மாட்டீர்கள். நீங்கள் என்னை விட்டுச்சென்ற போது என்னுடைய உயிரையும் பறித்துச்சென்று விட்டீர்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. என்னுடைய ஏக்கத்தை நீங்கள் அறிய முற்படவில்லை. நான் உங்களை பேணிக்காப்பேன் என்று வாக்களித்தேன். அதையே என் வேண்டுதலாயும் வைத்திருந்தேன். ஆனாலும் என்னைவிட்டு சென்று விட்டீர்களே மாமா!

உங்களுடைய நாமத்தினையே உயிர் மூச்சாய் கொண்டு இப்புவியில் ஜனித்தவன் நான். தாய் மாமனாக இருந்தாலும் தந்தையின் ஸ்தானத்தில் வீற்றிருந்தவர் நீங்கள். உங்களில் ஒருவனாய் கருதி என்னை சீராட்டி பாராட்டி வளர்த்தீர்கள். ஆனால் உயிர் பிரியும் நேரத்தில் உங்கள் சிந்தையில் நான் இல்லாமல் போய் விட்டேனோ மாமா? உங்களால் சந்தோசத்தை உணர்ந்தவன். உங்களாலேயே துன்பக்கடலில் மூழ்க வேண்டுமென்று எண்ணி என்னை விடுத்து தனியே சென்றீர்களோ மாமா?

நான் எப்பொழுது எல்லாம் நிலைகுலைகின்றேனோ அப்பொழுது எல்லாம் என்னைத்தாங்கிய ஈசன் நீங்கள். இலங்கையிலேயே சிறந்த கட்டட ஒப்பந்தக்காரராய் இருந்தாலும் உங்களுடைய மறைவு என்னை சீர் குலையவைக்கும் என்று அறியாமல் போய்விட்டீர்களே மாமா!

நான் தவறிழைக்கும் போதெல்லாம் என் தாயார் என்னைக் கண்டிப்பார். ஆனால் நீங்கள் என் மீது வைத்த நம்பிக்கையை சாட்சியாக்கி "அவன் என்னுடைய மருமகன்" என்பீர்கள். "அவனைக் கண்டிக்காதே" என்று என் தாயிடம் அறிவுரை கூறுவீர்கள். நீங்கள் என் மீது வைத்த நம்பிக்கை என் சுவாசம் நீங்கும் வரை நிலைத்திருக்கும் மாமா. வாழ்வில் எந்தக் கட்டத்தை நான் கடந்தாலும் நான் உங்களுடைய மருமகன் என்பது எனக்கு அழிவில்லா அங்கீகாரம் ஆகும்.

உங்களிடம் நான் பயில வேண்டியது அதிகம் என்பீர்கள். ஆனால், அவை எதையும் கற்றுத் தராமல் புவிவாழ்வை துறந்து சென்ற காரணம் என்ன மாமா? நான் பிறந்த போது நீங்கள் என் அருகில் இருந்தீர்கள். என் வதனத்தில் புன்னகை மலரும் போது என்னுடைய மகிழ்ச்சியை உங்களுடைய மகிழ்ச்சியாய் கருதி நீங்களும் புன்னகைத்தீர்கள். என் விழிகளிலிருந்து கண்ணீர் பெருகும் போதெல்லாம் அதைத்தடுத்து துடைத்துவிடவும் நீங்கள் என் அருகில் இருந்தீர்கள். இவ்வுலகில் நான் கடந்த 19 ஆண்டுகாலத்தில் எல்லாம் என்னுடனேயே இருந்த நீங்கள் நான் உங்கள் ஆசையை நிறைவேற்ற University இற்கு செல்லும் நேரம் நீங்கள் இங்கு இல்லாமல் போய் விட்டீர்களே மாமா!

என் வாழ்வினில் இருள் சூழும் போதெல்லாம் பிரகாசமாய் வந்து வழிகாட்டிய நீங்கள். தீயசக்திகள் என்னை நெருங்கும் பொழுதெல்லாம் ஆதவனாய் வந்து உங்கள் தைரியத்தாலும் தர்மத்தினாலும் மற்றும் என் மீது கொண்ட உரிமையினாலும் அவற்றை சுட்டெரித்தீர்கள். ஆனால் இனி என் கதி என்ன மாமா? எங்கு செல்வேன் நான்? இன்பமுற்ற போதும் உங்களிடமே வந்தேன். துன்பத்தில் வாடியபோதும் உங்களிடமே வந்தேன் ஆனால் இனிவரும் காலத்தில் எவரிடம் செல்வேன் மாமா? இவையனைத்தையும் நான் கற்கும் முன் விட்டுச்சென்றீர்களே மாமா!

நான் வாழ்ந்த வாழ்வினை ஓர் அற்புதமாய் மாற்றிய பெருமை உங்களையே சாரும் மாமா. ஓர் காலகட்டத்தில் நீங்கள் எனக்கு ஓர் வாக்களித்திருந்தீர்கள். அது என்னவெனில் நான் அவுஸ்திரேலியா செல்லும் போது விமான நிலையத்திற்கு வந்து என்னை வழியனுப்புவேன் என்றீர்கள். ஆனால் அவ்வாக்கினை தலைகீழாய் மாற்றி என்னை உங்கள் இறுதியாத்திரையில் உங்களை வழியனுப்ப வைத்துவிட்டீர்களே மாமா!

நீங்கள் எனது வாழ்வில் துன்பங்களையோ, கஸ்டங்களையோ சந்திக்க அனுமதிக்காமல் அரவணைத்தீர்கள். ஆனால் நீங்கள் சென்ற பிறகு உடல் அணுக்கள் அனைத்தும் மீள முடியாத் துயரத்தில் வாடுகின்றன மாமா! நீங்கள் இச்சை கொள்ளாத ஓர் காரியத்தினை அ ற்றி விட்டீர்கள் மாமா. என் இதயத்தினை சுக்குநூறாய் சிதைத்து விடைபெற்றீர்களே மாமா! அனைவரும் என்னிடம் மனம் தளராதே என்று கூறுகின்றார்கள். ஆனால் உங்களுடைய வருகை ஒன்றே என் மனதினை சீர் செய்யவல்லது என்று அவர்கள் அறியமாட்டார்கள் மாமா.

நீங்கள் இல்லாத வாழ்வினை சிந்திக்க வேண்டிய ஓர் காலகட்டத்திற்குள் என்னை தள்ளி விட்டீர்கள் மாமா. நான் உங்களை மீட்டெடுக்க முடியாத தூரத்தைக் கடந்து விட்டீர்கள் என்று நான் அறிவேன் மாமா. ஆனால் வாழ்வுள்ள காலம் வரை என் மூச்சு உங்கள் நாமத்தையே சுவாசிக்கும் மாமா. இனிவரும் காலத்தில் உங்களை இறைவனின் ஸ்தானத்தில் வைத்து என் வாழ்வினை தொடருவேன் மாமா!

**உங்கள் வருகைக்காக ஏங்கித் தவிக்கும் உங்கள் மகன்.....**

**மருமகன் - விதுர்சன்**

அன்னாரின் சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் கடந்த (25.04.2021) ஞாயிற்றுக்கிழமை கீரிமலை புண்ணிய தீர்த்தக் கரையில் நடைபெற்று, வீட்டுக் கிரியைகள் இன்று (27.04.2021) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனை நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல.25, வைத்தியசாலை சுற்றுவட்ட வீதி,
வவுனியா.

குடும்பத்தினர்
077 617 4009

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாக்குதல் சம்பவம்: இளைஞன், யுவதி மருத்துவமனையில்

சாவகச்சேரி, ஏப்.27

நள்ளிரவு வேளையில் தாக்குதலுக்கு இலக்கான நிலையில், இளம்பெண் (வயது-22) ஒருவரும், இளைஞர் (வயது-24) ஒருவரும் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று நள்ளிரவு 1 மணியளவில் கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் இடம்பெற்றுள்ளது. (ந-9)

## வவுனியா விபத்தில் நால்வர் படுகாயம்

வவுனியா, ஏப்.27

வவுனியா, ஹொரவப்பொத்தானை வீதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வாகன விபத்தில் சிறுவன் உட்பட நால்வர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

ஹொரவப்பொத்தானை வீதியூடாக வவுனியா நோக்கி பயணித்த ஓட்டோவை மாமடு பகுதியில் மோட்டார் சைக்கிள் முந்திச்செல்ல முற்பட்ட வேளையில் இரு வாகனங்களும் ஒன்றுடன் ஒன்று மோதுண்டு விபத்துக்குள்ளாகியுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-18)

## இ.போ.ச. வட பிராந்தியத்துக்கு புதிய முகாமையாளர் நியமனம்

யாழ்ப்பாணம், ஏப்.27

இலங்கை போக்குவரத்துச் சபையின் வட பிராந்திய பொது முகாமையாளராக ஆ. குணபாலச்செல்வம் நியமிக்கப்பட்டுள்ளார். அதற்கான நியமனக் கடிதம் நேற்றுமுன்தினம் போக்குவரத்து அமைச்சால் வழங்கப்பட்டுள்ளது. இவர் முன்னர் கோண்டாவில் சாலை முகாமையாளராக கடமையாற்றிய நிலையில் கொழும்புக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருந்தார். (ஐ-9)

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

## மரண அறிவித்தல்



தோற்றம் 04 - 02 - 1936

மறைவு 26 - 04 - 2021

### பாலசிங்கம் தங்கமணி

அராலி தெற்கு கரப்பிட்டிப் பிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் காளி கோவிலடி சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட பாலசிங்கம் தங்கமணி நேற்று (26.04.2021) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி வள்ளியம்மை அவர்களின் மூத்த மகளும், காலஞ்சென்றவர்களான கனகர் நாகம்மா தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற பாலசிங்கத்தின் அன்பு மனைவியும் கிருஷ்ணவேணி, கனகாம்பிகை அவர்களின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான கனகரத்தினம், சிவபாக்கியம், கணபதிப்பிள்ளை (அரசு மாஸ்டர்), அமரசிங்கம் (ஸ்தபதி), மற்றும் தங்கரத்தினம், கணேசலிங்கம், செல்வரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், பாலசுப்பிர ம ணியம் (ரிங்கர் மணியம்), ஜெகநாதன் (J.P) ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்றவர்களான இராசம்மா, சோமசுந்தரம், சண்முகலிங்கம், தனபாக்கியம் (சின்ன மணி), வடிவேலு, இராசதுரை, புஸ்பகுணம் மற்றும் லோகநாதன், புவனேஸ்வரி, இராஜேஸ்வரி, அன்னலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனியும், கபிலன் (SriLanka Insurance) ரிஷிதன், தக்ஷனா, சாம்பவி, துலக்ஜா, துவாரகன், வைஷ்ணவி, லவஜீவன், வதனமதி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.04.2021) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

காளி கோவிலடி,
சங்கானை.

தகவல்: குடும்பத்தினர்
077 468 6448


யாழ். கலாலயா பயிற்சியகம்

இலங்கையின் மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணையத்தால் (TVEC) பதிவு செய்யப்பட்ட பயிற்சி நிலையம்
விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)

2020 A/L, 2021 O/L எடுத்த மாணவிகளே! வெளிநாடு செல்லவிருக்கும் மங்கையரே! சொந்தமாக தொழில் செய்ய விரும்பும் நங்கையரே! மற்றும் ஆர்வம் உள்ள மகளிரே!

உங்களுக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!

- கேக் ஐசிங் - றோயல், Parchment, Frosting, Fondant, Whipping Cream Icing, மாச்சீனி மலர்கள். (Sugar Flowers).
- உணவு தயாரித்தல் - உணவு வகைகள், 6 வகையான Cakes, Cup Cake மற்றும் பீஸா, சிற்றுண்டிகள் குளிர்பானங் கள், ஐஸ் கிறீம், புடிங் தயாரித்தல்.
- FACIALS (முக அழகுக்கலை) Pedicure, Manicure, Nail Art, கண் புருவம் சீராக்குதல் (Eye Brow Threading), தேவையற்ற முடிகளைஅகற்றுதல் (Waxing)
- கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும் 40 வகையான கொண்டைகள் போடுதல், முடி அயன் செய்தல், முடி சுருட்டுதல், Hair Colouring, முடி வெட்டுதல், Hair Perming.
- BRIDAL DRESSINGS (மணப்பெண் அலங்காரங்கள்) இந்து, கிறிஸ்தவ இஸ்லாம் மணப் பெண் அலங்காரமும் Modern, கூர்க்காஸ், சிங்கப்பூர் குஜராத்தி, மடிசார், சிங்கள முறையிலான சேலை அணியும் முறைகள். முறைகளும் பயிற்று விக்கப்படும்.

பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

இம்முறை A/L, O/L எடுத்த மாணவிகளுக்கு கட்டணத்தில் கழிவு வழங்கப்படும்

சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம்
02.05.2021 ஞாயிறு காலை 10.00மணி
கிழமை நாள் புதிய பிரிவுகள் ஆரம்பம்
05.05.2021 புதன் காலை 10.00 மணி

-இயக்குநர்-


## 83வது பிறந்த நாள் நினைவலைகள் — 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 27 - 04 - 1938

மறைவு 09 - 10 - 2009

### அமரர் திரு. சின்னத்தம்பி சண்முகநாதன்

மண் விட்டு மறைந்து நீங்கள்
விண் நோக்கி சென்றாலும்
கண் விட்டு மறையாமல்
எம்மோடு வாழ்ந்திருப்பீர்

தங்கள் பிறந்த நாளில் நினைவு கூருகின்றோம்



தோற்றம் 21 - 10 - 1939

மறைவு 28 - 03 - 2021

கடந்த 28.03.2021 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்த எமது அன்புத்தாயார்

### அமரர் திருமதி பொன்னம்மா சண்முகநாதன்

கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும் எம்மோடு எந்நாளும்
உயிர் வாழ்ந்திருப்பீர்

எமது அன்புத் தாயாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (27.04.2021) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் முற்பகல் 11.00 மணியளவில் இடம்பெறும்.

அன்னாரின் பிரிவுச் செய்திகேட்டு நேரில் வந்து துயரில் பங்கு பற்றியோருக்கும் மலர்வளையம் வைத்தோர் மற்றும் துண்டுப்பிரசுரங்கள் வெளியிட்டோர்க்கும் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டோர்க்கும் மற்றும் சகல வழியிலும் ஒத்தாசை புரிந்த அனைவருக்கும் எம் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இல. 88, யாழ் வீதி, யாழ்ப்பாணம் — குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விபத்தில் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு உதவிகள்

மன்னார், ஏப்.27

தலைமன்னார் பியர் பகுதியில் அண்மையில் இடம் பெற்ற ரயில் விபத்தில் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் மற்றும் மருத்துவ தேவைக்கான நிதி உதவிகள் என்பவை நேற்று முன்தினம் வழங்கப்பட்டன. மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த கனடா வாழ் புலம் பெயர் நண்பர்கள் அமைப்பின் நிதி உதவியில் இந்த உதவிகள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் பிறட்லி, மன்னார் வலய கல்விப் பணிமனையின் உதவிக் கல்விப் பணிப்பாளர் பா.ஞானராஜ், பொறியியலாளர் றொபட் பீரிஸ் மற்றும் விபத்தில் காயமடைந்த மாணவர்கள் ஆசிரியர்கள், பெற்றோர் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஜ-56,60)



# மாவிலைத் தத்தியின் தாக்கத்தை கட்டுப்படுத்துவோம்








ஆ.சுதர்சனன்,
ந.நிரஞ்சன்குமார்
துறைசார் அலுவலர்கள்.

சாதாரணமாக மாமரங்கள் வருடத்தில் இரு தடவை காய்களை உருவாக்குகின்றன. மாமரங்கள் அதிகளவான பூக்களை வருடத்தில் பங்குனி தொடக்கம் வைகாசி மாதங்களிலும், ஆவணி தொடக்கம் புரட்டாதி மாதங்களிலும் உருவாக்குகின்றன. இருந்த போதும்; அனைத்துப்பூக்களும் கனிகளாக தோன்றும் தன்மை மிகவும் குறைவாகவே உள்ளது. இதற்கான முக்கிய காரணமாக அமைவது மாவிலைத் தத்தியின் தாக்கமாகும். இதன் விஞ்ஞானப் பெயர் இடியோஸ்கோப்பஸ். இந்தத் தாக்கமானது யாழ்குடாவில் பரவலாகக் காணப்படுகின்றது.

**மாவிலை தத்தியின் வாழ்கை வட்டம்**

மாவிலைத் தத்தி தன் வாழ்க்கை வட்டத்தில் முட்டை, அணங்கு, நிறையுடலி என்னும் 3 வளர்ச்சிப் பருவங்களைக் கொண்டது. இதனுடைய வாழ்க்கை வட்டம் 37 - 48 நாள்கள் ஆகும். நரை நிறமான பெண்பூச்சிகள் இளம் தளிர் இலைகளிலும் பூந்துணர்களிலும் முட்டைகளை இடுகின்றன. 6 தொடக்கம் 9 நாள்களில் பொரித்து வெளிவருகின்ற அணங்குகள் பொதுவாக சூரிய ஒளி படாத மரப்பட்டைகளி



லும் தண்டின் அடிப்பகுதியிலும் கூட்டமாக வாழ்ந்து பூந்துணர் மற்றும் இளம் தளிர்களில் சாற்றை உறிஞ்சுகின்றன. இந்த அணங்குகள் 16 தொடக்கம் 18 நாள்களில் 5 நிலைகளில் காணப்படுகின்றன. இவற்றின் குடித்தொகையின் பெருக்கமானது வெப்பகாலங்களில் அதிகளவில் காணப்படும். தாக்கத்தின் தன்மை அதிகரிக்கும்போது பூந்துணர்கள் கருமை நிறமாக மாறி பூக்கள் உதிர்கின்றன. அத்தோடு முதிர்ந்த இலைகளின் மேலிருந்து கறுப்பு நிறமான திரவம் வடியத்தொடங்கும். இந்தத் திரவம் தேன் சுவையை ஒத்துக் காணப்படும் இதனால் எறும்பின் நடமாட்டம் அதிகமாக காணப்படும். இதன் காரணமாக இரண்டாம் நிலை தாக்கமாக சூட்டி மோல்ட் என்னும் கறுப்பு கலர் பங்களின் தாக்கத்தை அவதானிக்கலாம்.

**கட்டுப்படுத்தும் வழிமுறைகள்**

மாமரத்தின் கீழ் குறிப்பிடப்பட்ட கிளைகளை கத்தரித்தல், முன்னைய போகத்தில் அறுவடை பெறப்பட்ட கிளைகள், நீர் வாதுக்கல், ஒன்றின்மீது ஒன்று மேற்பொருந்தும் கிளைகள், நோய் தாக்கத்தால் பாதிக்கப்பட்ட கிளைகள் ஆகியவற்றை கத்தரித்து விடமுடியும். அத்துடன் சூரிய ஒளி மாம்ரத்தின் பிரதான தண்டின் மீது படுமாறு மத்திய பகுதி திறந்த நிலையில் இருத்தலை உறுதிசெய்ய வேண்டும். மாலை வேளையில் காய்ந்த சருகையும் பச்சை வேப்பிலைகளையும் பாவித்து புகையூட்டல் போன்ற நடவடிக்கைகள் மூலம் மேற்படி தொல்லைகளில் இருந்து ஓரளவு தற்காப்பை மேற்கொள்ளலாம். மரத்தின் விதானத்துக்கும் பிரதான தண்டுக்கும் இடையில் வைத்து புகையூட்டல் வேண்டும் என்பதையும் கவனத்தில் கொள்க. அத்துடன் வேப்பம் கரைசலையும் வேறுசில கரைசல்களையும் பாவிப்பதன் மூலமும் தத்திகளைத் தவிர்க்கலாம்.

# இந்தியாவில் கொரோனா உக்கிரம்
## உலக நாடுகளின் உதவிகள் குவிகின்றன

புதுடில்லி, ஏப். 27

இந்தியாவில் கொரோனா நாளுக்கு நாள் உக்கிரமாகிவருகின்றது. இதையடுத்து உலக நாடுகள் இந்தியாவுக்கு பல்வேறு உதவிகளை வழங்கியுள்ளன. குறிப்பாக, இந்தியாவுக்குத் தேவையான ஒக்சிஜனை வழங்க பல்வேறு நாடுகளும் முன்வந்துள்ளன.





இந்தியாவில் கடந்த சில நாள்களாக கொரோனா கோரத்தாண்டவமாடி வருகின்றது. ஒவ்வொரு நாளும் சராசரியாக 3 லட்சத்து 50 ஆயிரம் பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டு வருகின்றனர். சராசரியாக 2 ஆயிரத்து 750 பேர் உயிரிழக்கின்றனர். இதுவரை ஒரு கோடியே 75 லட்சம் பேர் இந்தியாவில் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்தியாவின் வடமாநிலங்களில் நோயாளிகளுக்குத் தேவையான ஒக்சிஜன் இல்லாமல் அதிகளவு இறப்புக்கள் சம்பவித்துக் கொண்டிருக்கின்றன. சில மாநிலங்கள் ஊரடங்கு உத்தரவை நடைமுறைப்படுத்தியுள்ளன. இந்த நிலையில், இந்தியாவைக் கொரோனாவில் இருந்து மீட்டுவருவதற்கு உலக நாடுகள் நேசக்கரம் நீட்டியுள்ளன.

கொரோனாத் தடுப்பூசிக்குத் தேவையான மூலப்பொருள்களை இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்ய அமெரிக்கா முன்வந்துள்ளது. அத்துடன் சவூதி அரேபியா 80 மெட்ரிக் தொன் ஒக்சிஜனை ஏற்றுமதி செய்துள்ளது. அத்துடன் ஒக்சிஜனை உற்பத்தி செய்யும் கருவிகளை பிரிட்டனும், ரஷ்யாவும் இந்தியாவுக்கு வழங்கவுள்ளன. கூகுள் உள்ளிட்ட நிறுவனங்களும் இந்தியாவுக்கு உதவிகளை வழங்க முன்வந்துள்ளன.

மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரியும் இந்தியாவை பூர்வீகமாகக் கொண்டவருமான சத்யா நாதெள்ளா இது தொடர்பில் தெரிவிக்கையில்;

இந்தியாவில் கொரோனா சிக்கல் மோசமடைந்து வருவதைப் பார்க்கும்போது பேரழிவாக இருக்கிறது. இந்தியாவில் தற்போதுள்ள சூழலைப் பார்த்து என் இதயம் நொருங்கிவிட்டது. இந்தியாவுக்கு உதவி செய்யும் அமெரிக்க அரசுக்கு நான் நன்றி தெரிவிக்கிறேன். மைக்ரோசொப்ட் நிறுவனம் தொடர்ந்து தனது தொழில்நுட்பங்கள், ஆதரவு மற்றும் வளங்கள் ஆகியவற்றை மக்களை குணப்படுத்துவதற்கு வழங்கும்- என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட்டுவாகல் பாலத்துக்கு ஒளியை ஏற்படுத்துங்கள்

## கடற்றொழிலாளர்கள் கோரிக்கை

**முல்லைத்தீவு, ஏப். 27**
**முல்லைத்தீவு வட்டுவாகல் பாலத்துக்கு வெளிச்சம் பொருத்துவதற்கான நடவடிக்கையை கரைதுறைப் பற்று பிரதேச சபை முன்னெடுக்கவில்லை என்று அந்தப் பகுதியில் தொழிலில் ஈடுபட்டுள்ள கடற்றொழிலாளர்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**



இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;
நந்திக் கடலில் இரவு வேளைகளில் தொழிலில் ஈடுபடுபவர்கள் தமது கடல் உணவுகளை தெரிவுசெய்கின்ற இடமாக வட்டுவாகல் பாலத் தைப் பயன்படுத்துவதன் காரணமாக இருட்டு வேளைகளில் விபத்துகள் ஏற்படக்கூடிய அபாயம் உள்ளது. இதனால் வட்டுவாகல் பாலப் பகுதியில் மின்குமிழ்கள் பொருத்தப்பட்டு வெளிச்சம் ஊட்டப்பட வேண்டும் என்ற பிரேரணைகள் கரைதுறைப்பற்று பிரதேச சபையில் நிறைவேற்றப்பட்டன.
கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் திருமதி இமக்குலேற்றா புஸ்பானந்தனால் இப்பிரேரணைகள் சபையில் தீர்மானங்களாகக் கொண்டு செல்லப்பட்டன. வட்டுவாகல் பாலத்தில் வெளிச்சம் பொருத்தப்படும் என்ற உறுதி மொழிகள் வழங்கப்பட்ட நிலையில் தற்போதும் வட்டுவாகல் பாலம் இருளில் மூழ்கியுள்ளது.
வட்டுவாகல் பாலத்தில் வெளிச்சம் ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் கரைதுறைப்பற்று பிரதேச சபையால் முன்னெடுக்கப்படவில்லை. இதன் காரணமாக இரவு வேளைகளில் ஆபத்தான கட்டத்தில் கடற்றொழிலாளர்கள் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். எனவே பிரதேச சபை இதனைக் கருத்தில் கொண்டு பாலத்தை வெளிச்சமூட்டுவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் - என்றனர். (ப-13)


# போத்தலில் கள் அடைக்கும் பணிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப். 27
தற்போது கள் பருவகாலம் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், போத்தலில் கள் அடைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
தற்போதைய காலநிலையில் பனை மற்றும் தென்னை மரங்களில் இருந்து கூடுதலான கள் உற்பத்தியாகின்றது. உற்பத்தியாகும் கள்ளை வீணாக்காது அவற்றை போத்தலில் அடைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் வலிகாமம் கொத்தணியின் தலைவர் எஸ். செல்வராசா தெரிவித்தார்.
மேலும், கள் விற்பனை நிலையங்களிலும் (தவறணைகள்) தாராளமாக கள் விற்கப்படுகின்றது. மிதமிஞ்சும் கள்ளை ஊற்றாது அவற்றை பாதுகாப்பாக போத்தலில் அடைக்கும் பணிகளை சங்கங்கள் மேற்கொண்டு வருகின்றன - என்றார். (ஐ-17)





# முல்லை. காட்டுக்குள் வெடிபொருள்கள் மீட்பு!



முல்லைத்தீவு, ஏப். 27
முல்லைத்தீவு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தண்ணிமுறிப்பு காட்டுப்பகுதியில், போரின்போது கைவிடப்பட்ட ஒரு தொகுதி வெடி பொருள்கள் நேற்று மீட்கப்பட்டன.
மாவட்ட அரச புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவலையடுத்து, ஆர்.பி.ஜி வகை வெடிபொருள்கள் சிறப்பு அதிரடிப்படையினரின் உதவியுடன் மீட்கப்பட்டன. மீட்கப்பட்ட வெடிபொருள்கள் தொடர்பில் நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ம-4,19,26)

# வவுனியாவில் பரவலாக தொற்று நீக்கும் செயற்பாடு

வவுனியா,ஏப்.27
கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்தும் நோக்கில் வவுனியாவில் நேற்றுமுன்தினம் தொடக்கம் பரவலாக தொற்றுநீக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.
அந்தவகையில் வவுனியா நகரசபை , சுகாதாரப் பிரிவினர் மற்றும் இராணுவத்தின் ஏற்பாட்டில் வவுனியா பழைய பஸ் நிலையம், வங்கிகளின் தன்னியக்க இயந்திரங்கள், வியாபார நிலையங்கள் மற்றும் நகரின் முக்கிய பகுதிகளில் தொற்றுநீக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. (ஐ-110-18)




# மணற்குளம் ரயில் கடவையை பாதுகாப்பானதாக மாற்றுங்கள்

## மக்கள் அவசர கோரிக்கை

மன்னார், ஏப். 27
மன்னார், நானாட்டான் உயிலங்குளம் பிரதான வீதியில் அமைந்துள்ள பாதுகாப்பற்ற மாதோட்டம் மணற்குளம் ரயில் கடவையை பாதுகாப்பான முறையில் அமைத்து, மக்களை விபத்தில் இருந்து பாதுகாக்க அதற்குரிய காவலாளியையும் நியமியுங்கள் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,
இந்த ரயில் கடவை பகுதியூடாக தினமும் ஒரு மணித்தியாலத்தில் 200க்கும் மேற்பட்ட நபர்கள் பயணம் செய்கின்றார்கள். பாடசாலை மாணவர்கள், வயோதிபர்கள் உட்பட பலர் வாகனங்களில் 24 மணி நேரமும் இந்தக் கடவையூடாகப் பயணிக்கின்றனர்.
அந்த வகையில் இங்கு ரயில் ஓடத் தொடங்கிய காலத்தில் இருந்து இந்த மணற்குளம் ரயில் கடவை பாதுகாப்பற்றதாகவும், காவலாளி இல்லாமலும் காணப்படுகின்றது. தலைமன்னாரில் நடந்த அந்த கோர விபத்து சம்பவம் போன்ற ஒன்று மீண்டும் எமது பிரதேசத்தில் நடக்கக்கூடாது என்று கேட்டுக்கொள்கின்றோம். தற்போது உயிலங்குளம் - நானாட்டான் பிரதான வீதி காப்பெட் வீதியாகச் சீரமைப்பு செய்யப்படுகிறது. முன்பைவிட அதிகமான வாகனப் போக்குவரத்துக்கள் இந்த வீதியில் நடைபெறும் சந்தர்ப்பங்கள் அதிகம் உள்ளன. எனவே மாதோட்டம் மணற்குளம் ரயில் நிலையத்தில் பாதுகாப்பான ரயில் கடவையை அமைத்து காவலாளி ஒருவரை நியமித்து எமது மக்களை பாதுகாக்குமாறு மாவட்டச் செயலரைக் கேட்டுக்கொள்கின்றோம் என்றனர். (ப-213)

# இரவுநேர கடமைக்குச் சென்ற இளைஞனை காணவில்லை


வட்டுக்கோட்டை, ஏப். 27
வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அராலி மத்தி பகுதியில் வசிக்கும் நாதன் ஜெசிந்தன் (வயது - 20) என்பவரை கடந்த 23ஆம் திகதியிலிருந்து காணவில்லை என குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.
இது குறித்து மேலும் தெரியவருகையில்,
குறித்த இளைஞன் யாழ். போதனா வைத்தியசாலையில் காவலாளியாக கடமைபுரிந்து வருகின்றார். கடந்த 23ஆம் திகதி இரவு நேரக் கடமைக்குச் சென்ற நிலையில் இன்னமும் அவர் வீடு திரும்பவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.
இது தொடர்பாக வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்று பதிவுசெய்யப்பட்டுள்ளது. இது தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-319)



கோப்பாய் பிரதேசத்தில் அண்மையில் பெய்த மழை காரணமாக டெங்கு நோயின் தாக்கம் அதிகரிக்கலாம் என எதிர்வு கூறப்பட்டுள்ள நிலையில், டெங்கு பரவலைத் தடுக்கும் முகமாக இராணுவத்தின் 51ஆவது படையணியால் நேற்று முன்தினம் சிரமதானம் முன்னெடுக்கப்பட்டது. (ச-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள்



**மேடம்:** புதிய வேலைக்கான முயற்சிகள் வெற்றிபெறும். கனவு நனவாகும். மனத்துணிவு அதிகரிக்கும். பெண்களின் எண்ணம் நிறைவேறும். அலுவலக நிகழ்வு திருப்திகரமாக இருக்கும்.

**இடபம்:** கூடுதல் கவனம் செலுத்திப் பணிகளை முடிப்பீர்கள். அதிகாரியின் குறிப்பறிந்து செயற்பட்டு பாராட்டுப் பெறுவீர்கள். வெற்றிக்குத் தேவையான ஆதரவுகள் கிடைக்கும்.

**மிதுனம்:** போட்டிகளில் பங்கேற்கும் போது கவனம் தேவை. பிள்ளைகளின் திறமைகள் வெளிப்பட்டுப் பாராட்டுப்பெறுவர். வீண் அலைச்சல் குறையும். வாய்ப்புகள் கூடும்.

**கடகம்:** மனதுக்குப் பிடித்தவரிடம் இருந்த சச்சரவுகள் மறையும். இளைய சகோதரரிடமிருந்து இனிய செய்தி வந்து சேரும்.மனக் கவலைகள் அகலும் நாள். வரவு திருப்தி தரும்.

**சிம்மம்:** பணிக்காகச் சற்று நீண்ட பயணம் செல்ல திட்டம் உருவாகும். நண்பர் ஒருவர் உங்களிடம் மனம் விட்டுப் பேசி நிம்மதி அடைவார். கவனம் தேவை.

**கன்னி:** பொறுப்புகளை அலட்சியம் செய்து புறக்கணிக்க வேண்டாம். மற்றவர் பிரச்சினையைத் தீர்க்கும் நடவடிக்கையில் வெல்வீர்கள். பணியிட மாற்றத்தை சந்திப்பீர்கள்.

**துலாம்:** பணியிடத்தில் ஏற்பட்ட பிரச்னைக்கு நல்ல தீர்வு கிடைக்கும். புதிய நண்பர்களுடன் பழகும் போது கவனமாக இருக்கவும். எதிர்பாலினத்தினரால் நன்மையும், லாபமும் கிடைக்கும்.

**விருச்சிகம்** எதிரிகள் அடங்குவர். பழைய கடனில் ஒரு பகுதி வசூலாகும். வாழ்க்கைத்துணையின் அன்பும், ஆதரவும் உற்சாகம் தரும். பணி பற்றிய அலைச்சல் இருந்தாலும் ஆதாயமும் உண்டு.

**தனுசு** சமூக அந்தஸ்து உயரும். விலகிய உறவினர் தொடர்பு கொள்வர். உறவினரால் சில தொல்லைகளை சமாளிக்க வேண்டி இருக்கும். உங்கள் ஆலோசனையைப் பிறர் ஏற்பது மகிழ்ச்சி தரும்.

**மகரம்** தாயாருடன் இருந்து வந்த வீண் விவாதம் முடியும். பெண்களுக்கு வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டு. அவசரமோ, பதற்றமோ இல்லாதபடி பார்த்துக் கொள்ளவும்.

**கும்பம்:** மகிழ்ச்சியும், சிரமமும் உங்கள் செயல்கள் மூலம் சமமாக வரும். நேற்றிருந்த தொல்லைகளின் தீவிரம் இன்று மெல்லக் குறையும் .மகிழ்ச்சியான கொண்டாட்டம் நிலவும்.

**மீனம்:** சுபநிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள இன்று அழைப்பு வரும். நேர்மறை எண்ணங்கள் அதிகமாகும். பணிச்சுமை கூடும். நீங்கள் நம்பிய நபர் உங்களைக் கைவிடாமல் உதவிக்கு வருவார்.

# சுடோக்கு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 5 | | 2 | | | | 4 |
| 2 | 1 | | | | | | | 7 |
| | | | | | 9 | 5 | | |
| 4 | | 6 | 8 | 1 | | | | 9 |
| 5 | | 1 | | | | 3 | | 6 |
| 3 | | | | 6 | 2 | 4 | | 8 |
| | | 7 | 3 | | | | | |
| 1 | | | | | | | 7 | 5 |
| 8 | | | | 4 | | 6 | | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 6 | 1 | 2 | 4 | 5 | 7 | 8 | 3 |
| 3 | 7 | 2 | 8 | 6 | 1 | 4 | 5 | 9 |
| 5 | 8 | 4 | 7 | 3 | 9 | 2 | 1 | 6 |
| 8 | 1 | 6 | 4 | 9 | 3 | 5 | 2 | 7 |
| 4 | 3 | 7 | 6 | 5 | 2 | 1 | 9 | 8 |
| 2 | 5 | 9 | 1 | 7 | 8 | 3 | 6 | 4 |
| 7 | 2 | 3 | 5 | 8 | 6 | 9 | 4 | 1 |
| 6 | 4 | 5 | 9 | 1 | 7 | 8 | 3 | 2 |
| 1 | 9 | 8 | 3 | 2 | 4 | 6 | 7 | 5 |

**விதி1:** ஒன்பது சிறு கட்டங்கள் அடங்கிய ஒவ்வொரு சதுர அறையிலும் 1 முதல் 9 வரையுள்ள எல்லா எண்க ளும் ஒரே ஒரு முறை மட்டுமே வருமாறு அமைக்க வேண்டும். இப்படியாக இதே விதி அமையுமாறு சட்டகத்திலே உள்ள எல்லா அறைகளும் (9 அறைகள்) அமைய வேண்டும்.


**விதி2:** சட்டகம் முழுவதிலும் ஒவ்வொரு வரிசையிலும் (கிடையிலும்) எண்கள் 1 முதல் 9 வரையில் உள்ள எண்கள் ஒருமுறை மட்டுமே வருமாறு அமைக்க வேண்டும். இதே போல ஒவ்வொரு நெடையிலும் எண்கள் 1 முதல் 9 வரை ஒரே ஒரு முறை மட்டுமே வருமாறு அமைக்க வேண்டும்.




# ஆதிக்கம் செலுத்திய ஐந்து திரைப்படங்கள்

திரைப்படத்துறையின் உயரிய விருதாகக் கருதப்படுவது ஒஸ்கார் விருது. வழக்கமாக ஒவ்வொரு ஆண்டும் பெப்ரவரி மாதம் அமெரிக்காவில் நடைபெறும். கொரோனா பரவல் காரணமாக 93ஆவது ஒஸ்கார் விருது வழங்கும் விழா நேற்று நடைபெற்றது. நிகழ்சித் தொகுப்பாளர்கள் இன்றி நிகழ்வு அரங்கேறியது. 'சோல்', 'மங்க்', 'சவுண்ட் ஒப் மெட்டல்', 'பிளக் பொட்டம்', 'நோ மாட்லாண்ட்' ஆகிய 5 படங்கள் தலா இரண்டு ஒஸ்கார் விருதுகளை வென்றுள்ளன. சிறந்த பின்னணி இசை மற்றும் சிறந்த அனிமேசன் திரைப்படம் ஆகிய விருதுகள் 'சோல்' படத்துக்கு கிடைத்துள்ளன. சிறந்த படத்தொகுப்பு மற்றும் சிறந்த ஒலி அமைப்பு ஆகிய விருதுகளை 'சவுண்ட் ஒப் மெட்டல்' திரைப்படம் வென்றுள்ளது.

சிறந்த தயாரிப்பு வடிவமைப்பு மற்றும் சிறந்த ஒளிப்பதிவு ஆகிய பிரிவுகளில் 'மங்க்' திரைப்படம் விருது வென்றுள்ளது. சிறந்த ஒப்பனை மற்றும் ஆடை வடிவமைப்பு ஆகிய விருதுகள் 'பிளக் பொட்டம்' படத்துக்கு கிடைத்துள்ளன. சிறந்த படம் மற்றும் சிறந்த இயக்குநருக்கான விருது 'நோ மாட் லாண்ட்' படத்துக்கு கிடைத்தது.




# பிரபலமாகும் ஓவியா





இந்தியாவின் தற்போதைய மோசமான நிலைக்கு மோடி அரசை விமர்சித்து வருகின்றனர். இதில் பிக்பொஸ் புகழ் ஓவியாவும் விதிவிலக்கு அல்ல. அவர் மோடியைப் பற்றி பதிவிட்ட ருவீட் வைரலாகி வருகின்றது.

ரசிகர்களின் கேள்விக்குப் பதிலளிப்பவர் ஓவியா. ரசிகர் ஒருவர் மோடி அரசைப் பற்றி ஒரு வார்த்தையில் சொல்லுங்கள் என்று கேட்டார். அதற்கு அவர் 'மீம்ஸைப்' பதிலாகக் குடுத்தார்.

'என்ன பண்ணுறது சார்;, எல்லாம் சிரிப்பா இருக்கு' என்று அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. இது சமூக வலைத்தளங்களில் வைரலாகியுள்ளது.

சென்னைக்கு தேர்தல் பரப்புரைக்காக வந்த மோடியை எதிர்த்து 'கோ பக் மோடி' என்று ஓவியா பதிவிட்டமைக்கு பா.ஜ.கவினர் எதிர்ப்புத் தெரிவித்திருந்தமை நினைவில் கொள்ளத்தக்கது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சாட்சியங்கள் இல்லாமையினாலேயே பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் ரிஷாத் கைது

## நிலைமையை விளக்குகிறார் கஜேந்திரகுமார்

**கொழும்பு, ஏப். 27**

**ஒருவருக்கு எதிராக உரிய சாட்சியங்கள் இல்லாத போதுதான் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இலங்கை அரசுகள் பயன்படுத்துகின்றன. ரிஷாத் பதியுதீனின் கைதையும் இவ்வாறுதான் நாங்கள் நோக்குகின்றோம். சாட்சியங்கள் இருந்திருந்தால் ரிஷாத்துக்கு எதிராக எப்போதோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கும்.**



இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ரிஷாத் தொடர்பில் கடந்த 2 ஆண்டுகளாக நடைபெறும் விடயங்க ளைத் தொகுத்துப் பார்த்தால் இந்தக் கைது அரசியல் நோக்கத்துக்காகவே நடத்தப்பட்டது என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

இலங்கைப் பொலிஸார் ஆட்சியாளர்களின் ஓர் அங்கமாகவே செயற்படுகின்றனர். அது சுயாதீனக் கட்டமைப்பு அல்ல.

சர்வதேச சமூகத்தால் சட்டப்புத்தகத்திலிருந்து நீக்கப்படவேண்டும் என்று ஆழமாக வலியுறுத்தப்படும் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் ரிஷாத் கைது செய்யப்பட்டிருக்கின்றார். பயங்கரவாத தடைச் சட்டத்தை மாற்றி சர்வதேச நெறிமுறைக்கு அமைவான சட்டத்தைக் கொண்டு வருவோம் என முன்னைய அரசு ஐ.நாவுக்கு வாக்குறுதி வழங்கியிருந்தாலும் அதனை நடைமுறைப்படுத்தவில்லை.

தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற கட்சி என்ற அடிப்படையில் பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்பான மோசமான அனுபவங்கள் எங்களுக்குத் தெரியும். இந்தச் சட்டத்தின் ஊடாக கைதாகி விசாரணைக்கு உட்படுத்தப்படும்பொழுது நீதியைப் பெறுகின்ற விடயத்தில் அநீதி நிலைநாட்டப்படும் யதார்த்தமே இங்கு உள்ளது. ஈஸ்டர் தாக்குதலின் சூத்திரதாரிகள் கண்டறியப்படவில்லை, உரிய முறையில் விசாரணை நடைபெறவில்லை, சர்வதேச விசாரணையைக் கோரப் போகின்றேன் என்று பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தொடர்ச்சியாக அழுத்தங்களைப் பிரயோகித்து வரும் நிலையில் அதிலிருந்து தப்ப அல்லது மக்களை திசை திருப்பவே ரிஷாத்தை கைது செய்திருப்பதாகவே நாங்கள் சந்தேகிக்கின்றோம். சாட்சியம் இல்லாத இடத்தில் நபர்களை வழக்குகளின் ஊடாக தண்டிக்க முடியாத நிலையில் வழக்கு முடிவதற்கு முன்பாகவே தண்டனையை முழுமையாக அனுபவிக்குமாறு நபர்களை பழிவாங்கும் நோக்கத்தோடு தான் நீங்கள் இந்த பயங்கரவாதத் தடைச் சட்டத்தை பயன்படுத்துகிறீர்கள் என்பதனையும் நாங்கள் இங்கு பகிரங்கமாகக் கூற விரும்புகின்றோம்- என்றார். (ஒ.18)

# கர்தினாலை திருப்திப்படுத்தவா ரிஷாத் கைது செய்யப்பட்டார்?

## கேள்வி எழுப்புகிறது மக்கள் காங்கிரஸ்

கொழும்பு, ஏப். 27

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான விசாரணையில் திருப்தியில்லை என்று திரும்பத் திரும்பக் கூறிவரும் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையை திருப்திப்படுத்தவா, அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று அந்தக் கட்சியின் தவிசாளர் அமீர் அலி கேள்வி எழுப்பியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் கைது செய்யப்படும்போது அவரை என்ன காரணத்துக்காக கைது செய்கின்றார்கள் என்பதை அவரது குடும்பத்தினருக்குத் தெரிவிக்கவில்லை. அரசியல் நோக்கத்துடனேயே அவரைக் கைதுசெய்துள்ளனர்.

ஈஸ்டர் தாக்குதல் அரசியல் நோக்கத்துக்கானது என்று கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்திருந்தார். அவர் அந்த அரசியல் நோக்கத்தைப் பகிரங்கப்படுத்தவேண்டும். அரசு முன்னெடுத்த விசாரணைகளில் திருப்தியில்லை என்றும் ரஞ்சித் ஆண்டகை கூறியிருந்தார். இவ்வாறானதொரு நிலையிலேயே ரிஷாத் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஈஸ்டர் தாக்குதலின் சூத்திரதாரிகளை அறிவதில் கத்தோலிக்க மக்களை விட முஸ்லிம் மக்கள் அதிக ஆர்வமாக இருக்கின்றார்கள்.

ஈஸ்டர் தாக்குதலாளிகளுக்கு ரிஷாத் நிதி உதவி வழங்கினார் என ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில் எங்கும் குறிப்பிடப்படவில்லை. ஆனால் குண்டுதாரிகளில் ஒருவர் நடத்திய நிறுவனத்துக்கு, உலோகங்கள் வழங்கியமை தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்குமாறு இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவுக்கு பரிந்துரைத்திருந்தது. இதற்கமைவாக இந்த விடயம் தொடர்பில் துரித விசாரணைகளை மேற்கொள்ளுமாறு ரிஷாத் கோரியிருந்தார்.

ஈஸ்டர் தாக்குதலுக்கும் ரிஷாத்துக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று தற்போதைய பொலிஸ்மா அதிபர் விக்ரமரட்ன எழுத்தில் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு அறிவித்திருந்தார். இவ்வளவுக்குப் பின்னரும் ரிஷாத் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்றால் அதன் பின்னால் அரசியல் பழிவாங்கலே இருக்கின்றது- என்றார். (ஒ.இ)

# அரசியல் நோக்குடனேயே ரிஷாத் பதியுதீன் கைது

## முஷாரப் எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 27

ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டவர்களுக்கு எதிராக இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்படாத நிலையில், நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் கைதுசெய்யப்பட்டுள்ளமை, குறுகிய அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டது. இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஷாரப் தெரிவித்தார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் காரியாலயத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேசிய நல்லிணக்கத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் பொதுபலசேனா அமைப்பு செயற்படுகின்றது. ஆகவே அந்த அமைப்பு தடை செய்யப்பட வேண்டும் என்று ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் இதுவரையில் பொதுபலசேனா அமைப்பு தடை செய்யப்படவில்லை மாறாக அறிக்கையில் குறிப்பிடப்படாத பல அமைப்புக்களே தடை செய்யப்பட்டுள்ளன.

அத்துடன் குண்டுத்தாக்குதலுக்குப் பொறுப்புக்கூற வேண்டியவர்கள் என்று பெயர் குறிப்பிடப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர், பொலிஸ்மா அதிபர் ஆகியோருக்கு எதிராக எவ்வித சட்ட நடவடிக்கைகளும் இதுவரையில் முன்னெடுக்கப்படவில்லை - என்றார். (ம-4)



# இயலாமையை மறைப்பதற்கு அரசின் இன்னொரு முயற்சி!

## ரிஷாத் கைது தொடர்பில் இம்ரான் எம்.பி. சாடல்

திருமலை, ஏப். 27

மக்கள் மத்தியில் இனவாதத்தைத் தூண்டி, தமது இயலாமையை மறைப்பதற்கான முயற்சியாகவே அரசு, ரிஷாத் பதியுதீனைக் கைது செய்துள்ளது.

இவ்வாறு திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார். கொழும்பில் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நல்லாட்சி அரசைக் குறைகூறி பெரும் பொய்களுக்கு மத்தியில் இந்த அரசு ஆட்சிக்கு வந்தது. ஆட்சிக்கு வருவதற்கு அவர்கள் கூறிய அனைத்தும் பொய் என்று மக்கள் உணர ஆரம்பித்துள்ளனர். அதனைத் தடுக்க தமது சர்வாதிகாரத்தைப் பயன்படுத்த ஆரம்பித்துள்ளனர். சீனி ஊழல், தேங்காய் எண்ணெய் மோசடி, காடழிப்பு, துறைமுக நகரம், ஈஸ்டர் தாக்குதல் உள்ளிட்ட பல விடயங்களை மக்கள் முன் எதிர்க்கட்சியாக நாம் வெளிக்கொண்டு வந்தோம்.

அதில் முக்கியமான பாத்திரமாக நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ செயற்பட்டார். இதனால் ஆத்திரமடைந்த அரசு, இன்று அவரைக் கைதுசெய்வதற்கு முயற்சிக்கிறது.

இதன் உண்மைத் தன்மை வெளியில் தெரிந்ததும் வழமைபோல் இந்தக் கைதுகளுக்கு அஞ்சி எதிர்க்கட்சி வாயை மூடி இருக்காது. ரிஷாத் சார்பாக பேசுவதற்கு அவரது கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவருமில்லை. ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்களே அவருடன் உள்ளனர். அனைவரும் இருபதுக்கு கை உயர்த்தியதால் அவர்களின் வாய்களுக்குப் பூட்டுப் போடப்பட்டுள்ளது- என்றார். (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிரந்தர உத்தியோகத்தர்களாக பட்டதாரிகள் இன்று கடமையேற்பு

யாழ்ப்பாணம், ஏப். 27

வடக்கு மாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் 3ஆம் தரத்துக்கு மாகாண மட்டத்தில் பயிற்சியை நிறைவுசெய்த 350 பட்டதாரிகளுக்கு பயிற்சியின் பின்னர் வடமாகாண பிரதிப் பிரதம செயலாளர் (நிர்வாகம் )அலுவலகத்தால் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

வடமாகாண ஆளுநரின் அனுமதிக்கு அமைய கடந்த ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் அபிவிருத்தி அலுவலர்களாக நியமனம் பெறும் அனைவரும் இன்று செவ்வாய்க்கிழமையன்று நியமனக் கடிதத்தில் குறித்தொதுக்கப்பட்ட அலுவலகங்களில் நிரந்தர அதிகாரிகளாக கடமையைப் பொறுப்பேற்பர். நிரந்தர நியமனத்தின் போது 3 வருட தகுதிகாண் நிலைக்கு உட்படுத்தப்படுவர்.

இவ்வாறு தகுதிகாண் காலத்தில் அனைத்துத் தேவைப்பாடுகளையும் பூர்த்திசெய்தால் மட்டுமே இறுதியில் பதவியில் உறுதிப்படுத்தப்பட்ட நியமனக் கடிதம் நியமன அதிகாரியால் வழங்கப்படும். மேலும் நிரந்தர நியமனத் திகதியில் இருந்து மூன்று வருட காலப்பகுதிக்குள் சிங்கள மொழியில் தேர்ச்சி பெற்றிருக்கவேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வடக்கு மாகாணத்தில் உள்ள ஒவ்வொரு அரச திணைக்களங்களிலும் பட்டதாரிகளுக்கு வெறும் 6 ஆளணிகள் மட்டுமே அனுமதிக்கப்பட்டுள்ளதால் பெரும்பாலான பட்டதாரிகள் வெளிமாவட்டத்துக்குச் செல்லும் நிலையேற்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ப-50)

# ரிஷாத்தின் விடுதலையை வலியுறுத்தி போராட்டம்

## தனிநபரால் முன்னெடுப்பு



வவுனியா,ஏப்.27

முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் கைதுக்கு எதிர்ப்புத் தெரிவித்து மௌலவி ஒருவர் நேற்று வவுனியாவில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த அவர்; புனித நோன்புக் காலத்தில் பொய்யான கதையைக் கூறி ரிஷாத்தை கைதுசெய்துள்ளனர், அவரை கைதுசெய்த முறையையும் அந்த அமைப்பையும் நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம். இரண்டு வருடமாக ஒரே குற்றச்சாட்டையே இவர்கள் தெரிவிக்கின்றனர். எமது தலைவர் கொலைசெய்யக்கூடியவர் அல்லர். உங்களுக்குச் சந்தேகம் இருந்தால் அவரை வெளியிலேயே விடுங்கள். உங்களது புலனாய்வுத்துறையூடாக நீதியாக விசாரியுங்கள். அவர் எங்கும் ஓடமாட்டார். குற்றம் நிரூபிக்கப்பட்டால் தண்டனை வழங்குங்கள் - எனவே ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் தலையிட்டு ரிஷாத்தை உடனடியாக விடுதலை செய்யவேண்டும். அவர் எப்போது விடுவிக்கப்படு கின்றாரோ அன்றே எனது போராட்டம் நிறுத்தப்படும். இதேவேளை கைதுசெய்யப்பட்ட தமிழ் அரசியல் கைதிகளும் விடுதலை செய்யப்படவேண்டும். அவர்களது குடும்பங்களுடன் நிம்மதியாக வாழ்வதற்கு வழிசெய்யவேண்டும் - என்றார். (ப-110-18)

# தென்மராட்சி பிரதேசத்தில் மேய்ச்சல் தரவை இல்லை!

## கால்நடைகளை இறைச்சிக்கு விற்கும் நிலை

சாவகச்சேரி, ஏப். 27

**தென்மராட்சி பிரதேசத்தில் காலபோக நெற்செய்கையின் பின்னர், சிறு தானியப் பயிர்கள் பல இடங்களில் பயிரிடப்பட்டுள்ளதால் பிரதேசத்தில் மேய்ச்சல் தரவை இல்லாத நிலையில் பலர் தமது கால்நடைகளை இறைச்சிக்காக விற்பனை செய்யும் அவல நிலை காணப்படுகிறது.**

தென்மராட்சி பிரதேசத்தில் கடந்த வருடம் பெருமழை பெய்ததையடுத்து காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்ட பல வயல்களில் சிறு தானியப் பயிர்கள் பயிரிடப்பட்டன. இதனால் வாழ்வாதார உதவிகளாக பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட மாடுகள் மேய்ச்சல் தரவை இல்லாத காரணத்தால் இறைச்சிக்காக விற்கப்படுகின்றன.

முன்னைய காலங்களில் காலபோக நெற்செய்கை அறுவடை முடிந்ததும், வயல்களில் கால்நடைகளை மேய்ச்சலுக்கு விட்டனர். அரசின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் திட்டத்தின் பிரகாரம் நெற்செய்கை அறுவடை செய்த வயல்களில் சிறுதானியப் பயிர்களைப் பயிரிட்டுள்ளனர். மேட்டுக் காணிகள் துப்புரவு செய்யப்பட்டு தென்னம்பிள்ளைகளை வைத்துள்ளனர். இந்த நிலையில் மாடுகளை வீடுகளில் வைத்துப் பராமரிக்க முடியாத நிலை பண்ணையாளர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

இதேவேளை தூர உள்ள இடங்களில் மேய்ச்சலுக்கு விடப்படும் மாடுகளை தடம் வைத்துப் பிடித்துக் கொண்டு செல்கின்றனர். இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பண்ணையாளர்கள் பிரதேச செயலரைக் கேட்டுள்ளனர். (ஐ-9)



# தந்தை செல்வா நினைவுதினம் வவுனியாவில் கடைப்பிடிப்பு

வவுனியா, ஏப். 27

தந்தை செல்வாவின் நினைவு தின நிகழ்வுகள், வவுனியா மணிக்கூட்டுக்கோபுர சந்திக்கு அருகிலுள்ள தந்தை செல்வா நினைவுத்தூபி வளாகத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றன. தமிழரசுக் கட்சியின் செயலாளர் ப. சத்தியலிங்கம் தந்தை செல்வாவின் சிலைக்கு மலர்மாலை அணிவித்து நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். அதன் பின்னர் ஏனையவர்களால் அஞ்சலி செலுத்தப்பட்டது. நிகழ்வில் நகரசபை உறுப்பினர்களான நா.சேனாதிராசா, ரி.கே. ராஜலிங்கம், தமிழரசுக் கட்சியின் வவுனியா மாவட்ட உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்கள் கலந்து கொண்டனர். (ச-110)

# தந்தை செல்வா அலங்கரித்த கதிரையின் தூய்மையைக் கெடுக்கின்றாராம் மாவை

## ஆனந்தசங்கரி தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 27

தமிழ் அரசுக் கட்சியின் தலைவராக தந்தை செல்வா அலங்கரித்த தூய்மையான கதிரையில் மாவை சேனாதிராசா இருப்பது, தூய்மை என்ற சொல்லைக் கேள்விக்குட்படுத்துகின்றது என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஸ்ட ஸ்தாபக தலைவர்களில் ஒருவரான தந்தை செல்வாவின் நினைவு தின நிகழ்வு நேற்று கிளிநொச்சியில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தந்தை செல்வாவோடு நெருங்கிப் பழகியவன் நான். அவரது பிறந்த தினத்தன்று தனக்கு போடப்பட்ட மாலையை பிய்த்து என் மேல் வீசி ஆசீர்வதித்தார். அதுதான் அவரது இறுதி பிறந்த தினக் கொண்டாட்டமாகும். அடுத்து வந்த நாள்களில் அவருடைய உயிர்பிரிந்தது. இன்று அவரை வைத்து அரசியல் செய்கின்றனர். தந்தை செல்வாவின் கொள்கை, அவரது இலட்சியம் பற்றி அறியாதவர்கள் இன்று பெரியவருக்கு மாலை போடுவதற்கு முண்டியடிக்கின்றனர்.

தந்தை செல்வாதான் தமிழ் அரசுக் கட்சியை உருவாக்கினார் என்பது உலகறிந்த உண்மை. இதை நானும் உறுதியாகச் சொல்கிறேன். ஆனால் அவர் அந்தக் கட்சியை இல்லாது செய்துவிட்டு தமிழர் விடுதலைக் கூட்டணியை உருவாக்கினார். அதன் பின்னர் தமது சுயநலத்துக்காக தமிழ் அரசுக் கட்சியை மீண்டும் கொண்டு வந்தனர். உண்மையில் அது தந்தை செல்வாவுக்குச் செய்த துரோகமே யாகும். அந்த பெரும் தூய்மையான மனிதர் இருந்த தமிழ் அரசுக் கட்சியின் கதிரையில் சேனாதிராசா இருப்பது, தூய்மை என்ற சொல்லை கேள்விக்குட்படுத்துகின்றது. பொருத்தமான தலைவர்களை மக்கள் தெரிவுசெய்யவேண்டும். பிரதேச சபைக்கும், மாகாணசபைக்கும் ஆசைப்பட்டு அரசியலுக்காக தந்தை செல்வாவை பயன்படுத்துகின்றனர் - என்றார். (ப-6)

# மயங்கி வீழ்ந்த முதியவர் உயிரிழப்பு

கொடிகாமம், ஏப். 27

மயங்கி வீழ்ந்த முதியவர் சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் நாவற்காடு - வரணி பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

நாவற்காடு வரணியைச் சேர்ந்த (வயது-76) நீலன் சின்னவன் என்பவரே இறந்தவராவார்.

சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-159,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கை நோக்கிப் பயணித்தால் தமிழ் மக்களுக்கு வெற்றி உறுதி!

## தந்தை செல்வா நினைவுப்பேருரையில் சம்பந்தன் தெரிவிப்பு

**கொழும்பு, ஏப். 27**

**நாம் சில்லறை சலுகைகளுக்கு அடிபணியாமல் இலக்கை நோக்கியே தொடர்ந்து பயணிப்போம். அப்போதுதான் நாம் வெற்றியடைய முடியும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.**

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் ஸ்தாபகர் தந்தை செல்வாவினுடைய 44 ஆவது நினைவேந்தல் திருகோணமலையிலும் நேற்று அனுஸ்டிக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவிக்கையில்;

நாட்டில் ஆட்சி மாற்றமொன்று ஏற்பட வேண்டும். அனைத்து மக்களுக்கும் இன, மத பேதமின்றி சகலவிதமான சலுகைகளும் வழங்கப்பட வேண்டும் என்ற எண்ணத்திலேயே தந்தை செல்வா 1949ஆம் ஆண்டு கட்சியை ஆரம்பித்தார்.

நாங்களும் அவரது கொள்கைகளுக்கமையவே கடந்த 70 வருடங்களாக பயணித்து வருகின்றோம். அதிகளவான கட்சிகள் அவரது நிலைப்பாட்டை ஏற்றுக்கொண்டுள்ளன.

அந்தவகையில் நாமும் அவைகளை அடையக்கூடிய நிலையிலேயே தற்போது இருக்கின்றோம். சில பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் பெரும்பாலான பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைப் பெற்றுக்கொடுத்து இருக்கின்றோம்.

எதிர்வரும் காலங்களிலும் எங்களது இலக்கில் இருந்து விலகாமல், சில்லறை சலுகைகளுக்கு அடிபணியாமல் இலக்கை நோக்கிப் பயணிப்பதன் ஊடாக மாத்திரமே நாம் வெற்றியடைய முடியும். - என்றார். (து-22)



## பூந்தோட்டம் பகுதியில் பி.சி.ஆர். பரிசோதனை

வவுனியா, ஏப்.27

வவுனியா பூந்தோட்டம் பகுதியில் உள்ள வியாபார நிலையங்களில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு கடந்த வெள்ளிக்கிழமை பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

வவுனியாவில் 12 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்ட நிலையில், மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கொரோனாத் தொற்றாளர் ஒருவர் பூந்தோட்டம் பகுதியில் தொடர்புகளைப் பேணினார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதையடுத்து பூந்தோட்டம் சந்தியிலுள்ள வியாபார நிலையங்களில் கடமை புரியும் ஊழியர்களுக்கு எழுமாற்று பி.சிஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதேவேளை மாஸ்க் அணியாமல் வீதியால் சென்றவர்கள் சிலர் பொலிஸாரால் வழிமறிக்கப்பட்டு பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். (ஐ-110)

## மணல் அகழ்வைத் தடுத்தவரை சவள் மூலமாக அடித்த கும்பல்

### கெற்பேலியில் சம்பவம்

கொடிகாமம், ஏப். 27

சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்டவர்களைத் தடுக்க முற்பட்டவரை, மணல் அகழ்ந்தவர்கள் மணல் கிள்ளும் சவள் மூலமாக கடுமையாகத் தாக்கியுள்ளனர். அதனால் கடும் காயங்களுக்கு உள்ளானவர் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இந்தச் சம்பவம் கொடிகாமம் கெற்பேலி மேற்கு பகுதியில் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது. கெற்பேலி மேற்கில் வசிக்கும் பொ.நிமலன் (வயது - 27) என்பவரே காயமடைந்தவராவார்.

மணல் அகழ்வில் ஈடுபடுவோருக்கு எதிராக குறித்த இளைஞன் செயற்படுகின்றமையால் அவர்மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது என்று அங்குள்ளவர்கள் தெரிவிக்கின்றனர். கொடிகாமம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொள்கின்றனர். (து-159)

## தென்மராட்சி வர்த்தகர்களே பி.சி.ஆர். மேற்கொள்ளுங்கள்

கொடிகாமம், ஏப். 27

தென்மராட்சி பிரதேசத்தில் வியாபார நிலையங்களில் பணிபுரியும் அனைவரும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளவேண்டும் என்று சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை அறிவுறுத்தியுள்ளது.

சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையில் வாராந்தம் செவ்வாய்க்கிழமை, வியாழக்கிழமை மற்றும் சனிக்கிழமை ஆகிய நாள்களில் காலை 7.30 மணி தொடக்கம் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. குறித்த நாள்களில் பொதுமக்களுக்கான பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

(து-159)

**விற்பனைக்கு**

சாவகச்சேரியில் பாவித்த 2000 ஓடுகள் விற்பனைக்குண்டு

**077 226 9823, 077 659 0606**

## ஹரினை வேட் டையாட முற்பட்டால் சர்வதேசத்திடம் முறையிடத் தயார்

### சஜித் அணி எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 27

நீதிமன்ற அதிகாரத்தை ஜனாதிபதி ஆணைக்குழுவொன்றுக்கு வழங்குவது நாட்டின் நீதித்துறையின் சுயாதீனத்தன்மைக்கு பெரும் அச்சுறுத்தலாகும். அதனால் அரசு விசேட ஆணைக்குழு அமைத்து ஹரின் பெர்னாண்டோவை அரசியல் வேட்டையாட முற்பட்டால் நாங்கள் சர்வதேசத்திடம் முறையிடவும் தயார் என ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் கபீர் ஹாசிம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நல்லாட்சி அரசில் அரசியல் பழிவாங்கலுக்கு உட்பட்டவர்கள் தொடர்பில் ஆராய விசாரணைக் குழு அமைத்து, அதன் பரிந்துரைகளை குற்றப்புலனாய்வுத் துறைக்கு வழங்கியிருந்தோம். குற்றப்புலனாய்வுத் துறை அது தொடர்பில் விசாரணை செய்து அதன் அறிக்கையை சட்டமா அதிபருக்கு வழங்கி இருந்தது. சட்டமா அதிபர் திணைக்களமே குற்றம் உள்ளவர்களுக்கு எதிராக வழக்குத் தொடுத்தது.

அதனால் நாங்கள் காட்டுச்சட்டத்தை பின்பற்றி செயற்பட வில்லை. தொடுக்கப்பட்ட வழக்குகளுக்கு சாட்சியம் இல்லை என்றால் அவர் அதிலிருந்து விடுதலையாகலாம்.

அப்படி இருக்கும் நிலையில் நீதிமன்றத்துக்குச் சென்று தங்களின் குற்றமற்ற தன்மையை ஒப்புவிக்க ஏன் அச்சப்படுகின்றீர்கள். அத்துடன் அரசின் விசேட ஜனாதிபதி ஆணைக்குழு நாட்டின் சுயாதீன நீதித்துறைக்கு பெரும் அச்சுறுத்தலாகும்.

அதனால்தான் இதற்கு எதிராக சட்டத்தரணிகள் சங்கம் உட்பட பல அமைப்புகள் நீதிமன்றம் சென்றிருக்கின்றது.

எமது நாடு தொடர்பில் மனித உரிமைகள் பேரவையால் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுக்கள், அரசின் இந்த நடவடிக்கையை மேலும் உறுதிப்படுத்துவனவாக இருக்கின்றன.

நீதிமன்றத்துக்கு அப்பால் ஆணைக்குழுவொன்று தீர்ப்பு வழங்கும் நடவடிக்கையை மேற்கொள்வது நாட்டின் சுயாதீன நீதித்துறைக்கு பெரும் அச்சுறுத்தலாகும் -என்றார். (ப-இ)

## மரண அறிவித்தல்

தோற்றம் 01 . 08 . 1967



மறைவு 25 . 04 . 2021

**இம்மானுவேல் அன்ரன் ரவீந்திரகுமார்**

**(கிருபா லேணர்ஸ் பயிற்றுவிப்பாளர்)**

யாழ்ப்பாணம் இல.21/1, சின்னக்கடை வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இம்மானுவேல் அன்ரன்- ரவீந்திரகுமார் அவர்கள் கடந்த (25.04.2021) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அல்பிரட் ஜோசேப் இம்மானுவேல் (Benito) இம்மாகுலேற் (Bava) ஆகியோரின் சிரேஸ்ட புத்திரனும், புஸ்பாவின் அன்புக் கணவரும், கீதாந்தினி, மகிழன், கரிஸ்ராஜ் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ரஞ்சித்குமார், ராஜ்குமார், காலஞ்சென்ற கீதாந்தினி, சுஜாந்தி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், ராஜரட்ணம்-சூசன், இம்மானுவேல் லில்லி, மெட்ரில்டா ஆகியோரின் பேரனும், பிறின்சி, விஜிதன், சமிந்தன், குமார், காலஞ்சென்ற இராசு மற்றும் சாந்தி, சரோ, சூசை ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (27.04.2021) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு, புனித யாகப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

**077 4081 244**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கில்...

இலங்கையிலும் வீரியம் கூடிய கொரோனா வைரஸ் தாக்கம் அதிகரித்துச் செல்கிறது என மருத்துவ நிபுணர்களால் கூறப்பட்டு வருகின்றது. இந்த நிலையில் வடக்கில் கண்டறியப்படும் கொரோனாத் தொற்றாளர்களுக்கும் வீரியம் கூடிய வைரஸ் தாக்கம் ஏற்பட்டுள்ளதா என்பதை உறுதிசெய்வதற்காகவே கொழும்பு ஸ்ரீ ஜெயவர்த்தனபுர ஆய்வுகூடத்துக்கு மாதிரிகள் அனுப்பப்பட்டுள்ளன என கூறப்படுகின்றது. 'பிரிட்டனில் கண்டறியப்பட்ட திரிபடைந்த வைரஸின் தாக்கம் இலங்கையில் உணரப்பட்டுள்ளது. இதனால் பாதிக்கப்பட்டுள்ளவர்களை யாழ்ப்பாணத்திலுள்ள ஆய்வுகூடங்களில் மேற்கொள்ளப்படும் சோதனைகளின் ஊடாகக் கண்டறிய முடியாது. ஆனால் வழமைக்கு மாறான விதத்தில் உள்ள மாதிரிகளை அல்லது சந்தேகத்துக்கிடமான மாதிரிகளை மேலதிக ஆய்வுக்காக கொழும்புக்கு அனுப்புகின்றோம்' என்று மருத்துவ நிபுணர் ஒருவர் தெரிவித்தார்.

திரிபடைந்த வைரஸ் தொடர்பான ஆய்வுக்காக வடக்கிலிருந்து கொழும்புக்கு மாதிரிகள் அனுப்பப்பட்டுள்ளதை வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஆ. கேதீஸ்வரனும் உறுதிசெய்தார். (ஒ.5)

## டிப்பர்...

யாழ்ப்பாணத்திலிருந்து பலாலி பிரதான வீதியால் பயணித்த இராணுவ வாகனமும், கைதடி - மானிப்பாய் பிரதான வீதியில் பயணித்த டிப்பர் வாகனமும் உரும்பிராய் சந்திப் பகுதியில் விபத்தில் சிக்கின. மணல் ஏற்றியவாறு வந்த டிப்பர் வாகனம் விபத்தில் சிக்குண்டு கவிழ்ந்தது. இராணுவ வாகனத்தின் முன்பகுதி சிதைந்தது. இராணுவத்தினர் 13 பேர் காயமடைந்தனர். அவர்களில் 3 பேர் கடுமையான காயங்களுக்கு உள்ளாகினர். காயமடைந்த இராணுவத்தினர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

விபத்துத் தொடர்பில் இராணுவப் பொலிஸாரும், பொலிஸாரும் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (எ-ஓ-இ)

## அபாய கட்டத்தை....

இவ்வாறு யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் க.மகேசன் தெரிவித்தார்.

நேற்று யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

யாழ்ப்பாணத்தில் தற்போது ஆயிரத்து 200 பேர் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். தேசிய கொவிட் செயலணி தற்போதைய கொரோனாத் தொற்று நிலைமை தொடர்பான கட்டுப்பாடுகள் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பான அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளது. அவற்றின் அடிப்படையில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பிரதேச செயலகங்கள், உள்ளூராட்சித் திணைக்களங்கள் மற்றும் சுகாதாரத் திணைக்களங்கள் ஆகியவற்றுக்கு உரிய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. தற்போது நாட்டில் பரவும் கொரோனா வைரஸின் தொற்று வேகம் அதிகமாக இருக்கின்றது என்று சுகாதாரத் தரப்பினர் குறிப்பிடுகின்றனர். அதனால் மக்கள் தேவையற்ற போக்குவரத்துக்களைத் தவிர்ப்பது நல்லது.

பாடசாலைகள் அனைத்தும் இயங்க ஆரம்பித்துள்ள நிலையில், அனைவரும் சுகாதார நடைமுறைகளை உரிய முறையில் பின்பற்றாவிட்டால் எதிர்வரும் நாள்களில் கொரோனா கட்டுப்பாட்டு முடிவுகளில் மாற்றங்கள் ஏற்படலாம் என்றார். (எ-20)

## சிகிச்சைக்கு...

தெரிவித்தார். யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை ஆய்வுகூடத்தில் நேற்று 249 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அவர்களில் 15 பேருக்குக் கொரோனாத் தொற்றுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

சாவகச்சேரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற நால்வருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அவர்களில் இருவர் வெளிநோயாளர் பிரிவிலும், இருவர் நோயாளர் விடுதியிலும் சிகிச்சை பெற்றுள்ளனர். விடுதி மூன்றில் சிகிச்சை பெற்று வந்த சாவகச்சேரி வடக்கு சாவகச்சேரியைச் சேர்ந்த பெண் ஒருவரும், செட்டியார் குறிச்சி பூநகரியைச் சேர்ந்த பெண் ஒருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்ற மீசாலை, ஹம்பகாவைச் சேர்ந்த ஆண் ஒருவருக்கும், மிருசுவில் தெற்கைச் சேர்ந்த பெண் ஒருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் இருவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இவர்கள் இருவரும் நேற்றுமுன்தினம் கொரோனாத் தொற்றுடன் இனங்காணப்பட்ட ஒருவருடன் நேரடித் தொடர்பில் இருந்தவர்கள்.

சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்ட ஒருவருடன் நேரடித் தொடர்பில் இருந்தமைக்காக இவர் தனிமைப்படுத்தப்பட்டிருந்தார். தெல்லிப்பழை மருத்துவமனையின் நோயாளர் விடுதியில் தங்கிச் சிகிச்சை பெற்ற இரு நோயாளிகளுக்கும், மருத்துவமனைத் தாதிய உத்தியோகத்தர் ஒருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்டிருந்த மூவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதேவேளை மன்னார் மாவட்டத்தில், மன்னார் பொது மருத்துவமனையின் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்ற இருவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (எ-26)

## இலங்கைக்கான...

இங்கிலாந்து, அமெரிக்கா மற்றும் ஆஸ்திரேலியா என்பவை தமது நாட்டு பிரஜைகளுக்கு பயண எச்சரிக்கை வெளியிட்டுள்ளன. அதிலும் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவேண்டாம் என்றே ஆஸ்திரேலியா அறிவுறுத்தியுள்ளது.

இலங்கையில் தொற்று அதிகம் உள்ள பகுதிகளில் பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன. அத்துடன் கொரோனாக் கட்டுப்பாட்டு விதிகளும் இறுக்கமாக்கப்பட்டுள்ளன. அவற்றை மீறினால் கைதுசெய்யப்படுவீர்கள் என்று இங்கிலாந்து தனது பிரஜைகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளது.

வேறு சில நாடுகளும் இவ்வாறான அறிவுறுத்தல்களை வழங்க நடவடிக்கை எடுத்து வருகின்றன. (ஒ.இ)

## 8 கிராம...

கொரோனாத் தொற்றுப் பரவலையடுத்து இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என இராணுவத் தளபதியும், கொரோனாக் கட்டுப்பாட்டுச் செயலணியின் தலைவருமான சவேந்திர சில்வா அறிவித்துள்ளார். (ஒ.5)

## 997 பேருக்கு...

னாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அதேவேளை, இலங்கையில் கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களில் மேலும் 266 பேர் நேற்று பூரண குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

நாட்டில் இதுவரை கொரோனாத் தொற்றிலிருந்து பூரணமாக குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 94 ஆயிரத்து 577 ஆக அதிகரித்துள்ளது. நாட்டில் கொரோனாத் தொற்றால் மேலும் 3 பேர் உயிரிழந்துள்ளனர் என்று நேற்றிரவு அரச தகவல் திணைக்களம் அறிவித்தது.

இந்த உயிரிழப்புக்களுடன் இதுவரை நாட்டில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 647 ஆக அதிகரித்துள்ளது. (எ-22)

## தமிழர்கள்...

கொள்ள வேண்டும். இவ்வாறு தேசிய சமாதானப் பேரவையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி ஜெகான் பெரேரா தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் தந்தை செல்வா நினைவு மண்டபத்தில் நேற்று நடைபெற்ற தந்தை செல்வாவின் 44 ஆவது ஆண்டு நினைவு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

இலங்கைக்குப் பொருத்தமான ஆட்சி முறை சமஷ்டி முறையிலான ஆட்சி முறை என்று அன்றைய காலத்திலேயே குறிப்பிட்டிருந்தார்கள். அதுவும் சுவிட்ஸர்லாந்து மாதிரியான சமஷ்டி ஆட்சி முறையே இலங்கைக்குப் பொருத்தம் என்றும் கூறியிருந்தார்கள்.

சிங்கள மக்களைப் பொறுத்தவரையில் 2 ஆயிரத்து 500 ஆண்டுகளுக்கு முன்னர் தங்களுக்கு என்று ஒரு சரித்திரம் அமைந்துள்ளது என்று கூறுகின்றார்கள்.

புத்தபெருமான் தங்களுக்கு என்று ஒரு தீவைக் கொடுத்திருக்கிறார் என்று அவர்கள் நம்புகின்றனர். பௌத்தத்தைப் பாதுகாப்பதற்கான பொறுப்பு சிங்களவர்களின் கைகளில் கொடுக்கப்பட்டுள்ளது என்று நம்புகின்றனர். அந்த நம்பிக்கையின் அடிப்படையில் அவர்கள் செயற்படுவதைக் காணமுடிகின்றது.

இந்தத் தீவில் பெரும்பான்மையான எண்ணிக்கையாக அவர்கள் இருந்தாலும், அவர்களின் மனநிலை சிறுபான்மையினர் கொண்டிருப்பதைப் போன்றே உள்ளது. சிறுபான்மை மனநிலையுடைய சிங்களவர்கள் பெரும்பான்மையாக வாழ்ந்து கொண்டிருக்கின்றனர் என்று கூறமுடியும்.

அதற்குக் காரணங்கள் பல இருக்கின்றன. இந்தப் பிராந்தியத்தை எடுத்து நோக்கினால் அதில் அவர்கள் மிகச் சொற்ப எண்ணிக்கை உடையவர்களாக இருக்கின்றனர்.

அதேநேரம் தமிழ் மக்கள் வித்தியாசமான கலாசாரம், மொழி, பின்னணி என தாம் பிறிதொரு தேசம் என்ற மனநிலையில் வாழ்கின்றனர். இந்த இரு இனங்களுக்கு இடையே எவ்வாறு நிர்வாகத்தை மேற்கொள்வது என்ற கேள்வி எழுகின்றது.

தற்போது ஆட்சிக்கு வந்துள்ள அரசு அதிகாரப் பரவலாக்க முறைகளை மாற்ற வேண்டும் என்ற மனநிலையில் மக்கள் தங்களுக்கு வழங்கியுள்ளனர் என்ற சிந்தனையுடன் ஆட்சிப்பீடம் ஏறியுள்ளது. இப்படியான வித்தியாசமான சிந்தனையுடன் வந்த அரசு தோற்றுப் போயுள்ளது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் தீர்மானம் நிறைவேறியுள்ளது. இன்னும் 18 மாத காலத்துக்கு இலங்கை அரசுமீது கடும் கண்காணிப்பு இருக்கும்.

தமிழர்களாகிய நாம் எமது நம்பிக்கையை இழக்கக்கூடாது. பலவிதமான சவால்கள் இருந்து கொண்டிருக்கும் நிலையிலும் கூட எங்களுடைய நம்பிக்கைகளை நாங்கள் இழக்கக்கூடாது. தொடர்ச்சியாக அதற்கான எங்களுடைய முயற்சிகளை நாங்கள் தொடர்ந்து செய்துகொண்டே இருக்க வேண்டும். என்றார். (எ-20)

## சமையல்...

உள்நாட்டு சமையல் எரிவாயுவின் விலையை குறைந்தபட்சம் 350 ரூபாவால் அதிகரிக்க வேண்டும் என்று எரிவாயு விற்பனை நிறுவனங்கள் கோரிக்கை விடுத்திருந்தன. இது தொடர்பில் கேட்டபோதே இராஜாங்க அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

சர்வதேச சந்தையில் சமையல் எரிவாயுவின் விலை அதிகரித்துள்ளது. அதனால் சிரமங்களை எதிர்கொண்டுள்ள நிறுவனங்களுக்கு அரசு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் ஆராய்ந்து நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். எரிவாயுவின் விலையை அதிகரிக்கும் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்படாது என்றும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

## இந்தியாவின்...

ஆனால் இலங்கையில் பரவியுள்ள கொரோனா வைரஸில், ஒரு பிறழ்வு உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை, நோய் எதிர்ப்பு மற்றும் உயிரியல் பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.

தற்போது பரவும் கொரோனா வைரஸ் வகையைப் பற்றிய சரியான ஆய்வுகளைச் செய்த பின்னரே, ஒரு தெளிவான அறிக்கையை எம்மால் வெளியிட முடியும். எனினும் நாட்டில் கொரோனா வைரஸ் தற்போது வேகமாகப் பரவுகின்றது என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என அவர் தெரிவித்தார். (ம-4)

## மேல்...

என்று எனக் கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

இந்த இரு மாகாணங்களிலும் கொரோனா வைரஸ் தொற்று அதிகளவில் பரவ ஆரம்பித்துள்ள பின்னணியிலேயே இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை, சியம்பலாண்டுவ, மொனறாகல, புத்தல ஆகிய கல்வி வலயங்களைச் சேர்ந்த 15 பாடசாலைகள் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் மூடப்பட்டுள்ளன.

கொரோனாத் தொற்று நிலைமையால் திருகோணமலை கல்வி வலயப் பாடசாலைகளும் மீள் அறிவித்தல்வரை மூடப்பட்டுள்ளன. (எ-22)

## அரச...

அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பான சுற்றறிக்கை இன்று வெளியிடப்படும் என்று பொதுநிர்வாக அமைச்சின் செயலர் அறிவித்துள்ளார். (ஒ.இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலைப்புலிகள் மீதான தடைக்கு எதிராக பிரிட்டனில் நடைபயணம்

கொழும்பு, ஏப். 27

பிரித்தானியாவில் தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான தடைக்கு எதிராக நடைபயணம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது. நாடு கடந்த தமிழீழ அரசு இந்த நடைபயணத்தை ஏற்பாடு செய்துள்ளது.

இந்த நடைபயணம் தொடர்பில் ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கையில்;

'பிரித்தானியாவில் தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடைக்கு எதிராக தொகுக்கப்பட்ட சட்டப் போராட்டத்தின் தொடர்ச்சியாக உள்துறை அமைச்சுக்கு விசேட தீர்ப்பாயம் மறுபரிசீலனை செய்ய வழங்கியிருந்த 90 நாள்கள் நெருங்கி வருகின்ற நிலையில் பிரித்தானியா வாழ் தமிழர்கள் தங்களின் அபிலாசைக்கான தீர்வை நோக்கி இணையவழி கையெழுத்து போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

இவ்வாறாக பிரித்தானிய மக்களால் அவரவர் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பும் மின்மடல்கள் அவர்களை மேலும் பெரும் நெருக்கடிக்குள் உட்படுத்தியிருக்கின்றன. இதனை கருத்திற்கொண்டு நாடுகடந்த தமிழீழ அரசு இதற்கான பரப்புரைகளை தற்போது தீவிரப்படுத்தி யுள்ளது.

தொகுதிவாரியாக பரப்புரைகளை மேற்கொண்டு வரும் அதேநேரம் தமிழ் மக்கள் ஆதரவு வேண்டியும் விழிப்புணர்வுக்காகவும், மேலும் அழுத்தம் கொடுப்பதன் மூலம் தீர்வை நோக்கி பயணிக்க முடியும் என்பதை கருத்திற்கொண்டு "வோல்க் போ லிப்ரத பான்" எனும் நடைப்பயணத்தை ஆரம்பித்துள்ளோம் -என்றனர். (ப)

---

### வடக்கு மாகாணத்தில்

# வீடுகளை முழுமைப்படுத்த ரூ.7,500 மில்லியன் தேவை

### முன்னாள் எம்.பி சந்திரகுமார் பிரதமருக்கு கடிதம்

கிளிநொச்சி, ஏப். 27

கடந்த காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட வீட்டுத்திட்டங்களை பூர்த்தி செய்வதற்கு வடக்கு மாகாணத்துக்கு மட்டும் 7ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்ட மில்லியன் ரூபா நிதி தேவைப்படுகிறது. எனவே இந் நிதியை படிப்படியாக விடுவித்து மக்களை நெருக்கடிக்குள் இருந்து மீட்க வேண்டும் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் பிரதமர் மஹிந்த ராஜபக்சவுக்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் உள்ளதாவது;

வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் கடந்த காலத்தில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையால் ஆரம்பிக்கப்பட்ட வீட்டுத்திட்டங்களுக்கான பணம் முதலாம் கட்டம், இரண்டாம் கட்டம் என சில கட்டங்கள் வழங்கப்பட்ட நிலையில் மிகுதிப் பணம் வழங்கப்படவில்லை.

இதனால் வீட்டுத் திட்டப் பயனாளிகளான பொதுமக்கள் கடும் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளனர்.

வீட்டுத்திட்டங்கள் மூலம் வீடுகளைப் பெற்றவர்கள் அதனை பூர்த்தி செய்ய முடியாது அரைகுறையான கட்டுமானங்களுடன் உள்ளனர்.

இவர்களின் நிலைமையும் பரிதாபத்துக்குரிய நிலையில் உள்ளது. அவர்கள் தற்போது வாழ்கின்ற தற்காலிக வீடுகள் மிகவும் மோசனமான நிலையில் காணப்படுகின்றன.

எனவே மேற்படி நிலைமைகளை கருத்திற் கொண்டு படிப்படியாக வீட்டுத்திட்ட நிதியை விடுவித்து மக்களை நெருக்கடிக்குள் இருந்து மீட்க வேண்டும்.

இந்த வீட்டுத்திட்டங்களைப் பூர்த்தி செய்வதற்கு யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு ஆயிரத்து 189.330 மில்லியன் ரூபாவும், கிளிநொச்சி மாவட்டத்துக்கு ஆயிரத்து 912.747 மில்லியன் ரூபாவும், முல்லைத்தீவு மாவட்டத்துக்கு ஆயிரத்து 592.27 மில்லியன் ரூபாவும், மன்னார் மாவட்டத்துக்கு ஆயிரத்து 573.348 மில்லியன் ரூபாவும், வவுனியா மாவட்டத்துக்கு ஆயிரத்து 245.362 மில்லியன் ரூபாவும் தேவைப்படுகிறது -என்றுள்ளது. (ஐ-214)


**சாரதி தேவை**

JCP வாகனத்திற்கு சாரதி அனுமதிப் பத்திரமுள்ள வேலையாள் தேவை.

077 353 3809, 077 838 6772

**வேலையாட்கள் தேவை**

இணுவிலில் உள்ள தச்சுத் தொழிற்சாலைக்கு அனுபவமுள்ள வேலையாட்கள் தேவை.

தொடர்பு: 077 713 0872

**இலவசமாக நாங்கள் தருகிறோம் (Paint)**

உங்கள் வீட்டின் வர்ணக் கனவை நனவாக்குகிறோம் வர்ணத்தை இலவசமாக நாங்கள் தருகிறோம். நிபந்தனைக்குட்பட்டது

அழையுங்கள்: 077 072 2886

**வேலைவாய்ப்பு**

உதயன் நிறுவனத்திற்கு கீழ்வரும் வெற்றிடத்திற்கு தகுதியான வர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

- சாரதி (Driver)

மேற்படி வெற்றிடத்திற்கு தகுதியானவர்கள் இன்று (27.04.2021) செவ்வாய்க்கிழமை காலை 8.00 - மாலை 5.00 மணி வரை கீழ் வரும் முகவரிக்கு நேரில் சமுகம் தரவும். முன் அனுபவம் மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்.

உதயன்

இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**வேலைவாய்ப்பு**

1) கதிரியக்கவியலாளர் - (Radiographer)
2) ஆய்வுகூட உதவியாளர் (பயிற்றுவிக்கப்பட்ட முன் அனுபவமுள்ளவர்)
3) தகவல் தொழில்நுட்பவியலாளர் (ஆண்) (System Maintanance & Data Entry)

தொடர்புகளுக்கு

சன்ரைஸ் மெடிகிளினிக், யாழ்ப்பாணம்

021 222 6069, 021 222 8013, 077 212 3486

E-mail : sunrisemediclinic@gmail.com


## மரண அறிவித்தல்

தோற்றம் 27 - 06 - 1945



மறைவு 26 - 04 - 2021

**சக்கரியாஸ் றெஜீனா (மரியமலர்)**

செண்பீற்றேர்ஸ் வீதி நவாலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சக்கரியாஸ் றெஜீனா 26.04.2021 திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை அன்னா தம்பதிகளின் அன்பு மகளும், திரு. ஏனோக்கு சக்கரியாஸின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற ஈன்ஸ்ரின் ஜெனின்தாஸ், ஸ்ரெலன் கருணைதாஸ் (ஆசிரியர், யாழ்ப்பாணக்கல்லூரி), ஜஸ்ரின் பாலதாஸ் (ஆசிரியர் தமிழ் மத்திய மகா வித்தியாலயம், வவுனியா) காலஞ்சென்ற ஜீவதாஸ் ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜெனி ஜக்குலின், ஜெயசிறீ (ஆசிரியர், சென்மேரிஸ் ஊர்காவற்துறை), நளாயினி (ஆசிரியர் பெரிய கோமரசன்குளம் மகா வித் தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், செலஸ்ரின் தருமராஜா, பிலேன்திரன், ஜோன் பப்ரிஸ்ட் (ஓய்வுபெற்ற ஆசிரியர், யாழ்ப்பாணக் கல்லூரி) காலஞ்சென்ற ஞானசீலன், அன்ரன் ஜெயக்குமார் (Asian textile), சில்வெஸ்ரர், நவநாயகம், பிரான்சிஸ் (Denmark), ஜோன்சன் (London), ஜெயமலர் (Nertherland), றொபின்சன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஜமிசன், மெலிசா, ஜனுஸ், கமிஸ், அரிஸ், சந்தோஷ், டெனிசா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு இன்று (27.04.2021) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நவாலி செண்பீற்றேர்ஸ் தேவாலயத்தில் நடைபெற்று நவாலி செண்பீற்றேர்ஸ் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

நவாலி தெற்கு, மானிப்பாய்.
077 440 5917

தகவல்: குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

தோற்றம் 07 - 04 - 1946



மறைவு 26 - 04 - 2021

**திருமதி சகுந்தலாதேவி சிதம்பரநாதன்**

அம்பலவாணர் வீதி, முதலாம் ஒழுங்கை உடுவில் கிழக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சகுந்தலாதேவி (சகுந்தலா) சிதம்பரநாதன் நேற்று (26.04.2021) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சுதுமலையைச் சேர்ந்த இராசையா சிதம்பரநாதன் (இளைப்பாறிய மலேரியா கட்டுப்பாட்டு உத்தியோகத்தர்) அவர்களின் பாசமிகு மனைவியும் அச்செழுவை சேர்ந்த காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி ஞானம்மா தம்பதியரின் ஏக புத்திரியும், சுதுமலையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான பயில்வான் இராசையா சௌபாக்கியம் தம்பதியரின் அருமை மருமகளும் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து (Burma) சிவப்பிரகாசம் (புகையிரத திணைக்களம்) ஆகியோரின் மருமகளும், சரஸ்வதியின் அன்பு பெறாமகளும் மயூரன் (நிறைவேற்று அலுவலர் HNB வவுனியா), நீருஜா (தொழில்நுட்ப உத்தியோகத்தர் IDEL Engineering Pvt Ltd) ஆகியோரின் அருமைத் தாயாரும் அர்ச்சனாவின் (ஆசிரியை மாங்குளம் மகா வித்தியாலயம்) பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.04.2021) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று உடுவில் பூவோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இ. சிதம்பரநாதன் (கணவன்)
021 224 2726
சி. மயூரன் (மகன்)
077 153 9174

தகவல்: குடும்பத்தினர்
அம்பலவாணர் வீதி,
முதலாம் ஒழுங்கை
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 27.04.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.